Registered as a news paper.

பக்கங்கள்: பத்து

விலை: ரூபா 6.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

தீபாவளிப் பரிசில்கள்




கொள்வனவு செய்யும் ஒவ்வொரு
பொருளுக்கும் அன்பளிப்பு உண்டு.

சிங்கர்

இல 01, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2034 ஐப்பசி 04 ஆம் நாள், ஹிஜ்ரி 1425 ஷஃபான் 24 (21.10.2003) செய்வாய்க்கிழமை இதழ்:21

## இலங்கையின் ஐக்கியத்தைப் பாதிக்காதவகையில்

# புலிகளுக்கு அதிகாரங்களைப் பகிர

# இந்திய அரசாங்கம் ஆதரவளிக்கும்!



புதுடெல்கியில் இந்திய துணைப் பிரதமர் எல்.கே.அத்வானியைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சந்தித்தபோது, எடுத்துக்கொண்ட படம்.

## துணைப் பிரதமர் எல்.கே.அத்வானி

(புதுடெல்கி)

**விடுதலைப் புலிகளுடன் இலங்கை அரசாங்கம் அதிகாரங்களைப் பகிர்ந்து கொள்வதற்கு இந்தியா ஆதரவளிக்கும். ஆனால், அது இலங்கையின் ஐக்கியம், இறைமை என்பன பாதிக்காத வகையில் இருக்கவேண்டும் என்று, இந்தியத் துணைப்பிரதமர் எல்.கே.அத்வானி புதுடெல்கியில் தன்னைச் சந்தித்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் தெரிவித்தார்.**

இந்தியாவுக்கு உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டுள்ள பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இந்திய அரசியல் தலைவர்களுடன் முக்கியத்துவம் வாய்ந்த பேச்சுக்களை நடத்தினார். இருதரப்பு பாதுகாப்பு மற்றும் பொருளாதார ஒத்துழைப்புக்கள் தொடர்பாக பேச்சுக்கள் நடத்தப்பட்டதாகத் தெரியவருகிறது.

நேற்றுக்காலை, புதுடில்லியில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை, இந்திய வெளியுறவு அமைச்சர் ஜஸ்வந்த் சின்ஹா சந்தித்துப் பேசினார். இந்தப் பேச்சுக்கள் சுமார் 40 நிமிடங்கள் நீடித்தன.

இந்தப் பேச்சுக்ளின் பின், பிரதமர் ரணிலுக்கும் தனக்கும் இடையே நடைபெற்ற விடயங்களைத் தெரிவிக்க மறுத்த ஜஸ்வந்த்சின்ஹா- இருவருக்குமிடையில் தற்போதைய நிலைமைகள் (10 ஆம் பக்கம் பார்க்க)

## படையினரின் உழவு இயந்திரம் மோதி வவுனியாவில் இளைஞன் படுகாயம்!

(வவுனியா)

வவுனியா செட்டிக்குளம் பகுதியில் படையினரின் உழவு இயந்திரம் மோதியதில், இளைஞர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

நேற்றுமுன்தினம் பிற்பகல் 4 மணியளவில், செட்டிக்குளம் பிரதான வீதியில் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த இளைஞர் மீது உழவு இயந்திரம் மோதியது.

இதன்போது, முதலியார்குளம் - செட்டிக்குளத்தைச் சேர்ந்த கஜன் (வயது 21) என்பவரே காயமடைந்தவராவார். இவர் பயணம் செய்த சைக்கிள் பலத்த சேதமடைந்துள்ளது.

(01)

### விண்ணாணம் விநாசியர்



இப்பவாவது ஞாபகம் வந்ததே?

## மீன்பிடிப் படகு கவிழ்ந்து இளைஞன் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி கிழக்கு கடலில் படகு கவிழ்ந்து, இளைஞர் ஒருவர் நீரில் மூழ்கி மரணமாகியுள்ளார்.

ஆழியவளையைச் சேர்ந்த சிவலிங்கம் சிறிமுரளிதரன் (வயது 17) என்பவரே உயிரிழந்தவராவார்.

கடல் கொந்தளிப்பாக இருக்கும்நிலையில் -நேற்றுமுன்தினம் மாலை 4 மணியளவில், வடமராட்சி கிழக்கு - ஆழியவளைப் பகுதியில் நான்கு இளைஞர்கள் மீன்பிடிப்பதற்காக கடலுக்குச்சென்றனர். அவ்வேளை கடல் கொந்தளிப்பால், படகு கவிழ்ந்தது. இதனால், அவர்கள் கடலில் மூழ்கினர். இவர்களில் ஒருவரே பரிதாபகரமாக உயிரிழந்தவராவார்.

## சமாதானப் பேச்சுகளில் முஸ்லிம்கள்

## தனித்தரப்பாகப் பங்கேற்கும் பிரேரணைக்கு

## மன்னாரில் இளம்பெண் மீது பொலிஸார் பாலியல்வல்லுறவு



புதுடெல்கியில் இந்திய துணைப் பிரதமர் எல்.கே.அத்வானியைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சந்தித்தபோது, எடுத்துக்கொண்ட படம்.

# துணைப் பிரதமர் எல்.கே.அத்வானி

(புதுடெல்கி)

**விடுதலைப் புலிகளுடன் இலங்கை அரசாங்கம் அதிகாரங்களைப் பகிர்ந்து கொள்வதற்கு இந்தியா ஆதரவளிக்கும். ஆனால், அது இலங்கையின் ஐக்கியம், இறைமை என்பன பாதிக்காத வகையில் இருக்கவேண்டும் என்று, இந்தியத் துணைப்பிரதமர் எல்.கே.அத்வானி புதுடெல்கியில் தன்னைச் சந்தித்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் தெரிவித்தார்.**

இந்தியாவுக்கு உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டுள்ள பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இந்திய அரசியல் தலைவர்களுடன் முக்கியத்துவம் வாய்ந்த பேச்சுக்களை நடத்தினார். இருதரப்பு பாதுகாப்பு மற்றும் பொருளாதார ஒத்துழைப்புக்கள் தொடர்பாக பேச்சுக்கள் நடத்தப்பட்டதாகத் தெரியவருகிறது.

நேற்றுக்காலை, புதுடில்லியில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை, இந்திய வெளியுறவு அமைச்சர் ஜஸ்வந்த் சின்ஹா சந்தித்துப் பேசினார். இந்தப் பேச்சுக்கள் சுமார் 40 நிமிடங்கள் நீடித்தன.

இந்தப் பேச்சுக்ளின் பின், பிரதமர் ரணிலுக்கும் தனக்கும் இடையே நடைபெற்ற விடயங்களைத் தெரிவிக்க மறுத்த ஜஸ்வந்த்சின்ஹா- இருவருக்குமிடையில் தற்போதைய நிலைமைகள் (10 ஆம் பக்கம் பார்க்க)

## படையினரின் உழவு இயந்திரம் மோதி வவுனியாவில் இளைஞன் படுகாயம்!

(வவுனியா)

வவுனியா செட்டிக்குளம் பகுதியில் படையினரின் உழவு இயந்திரம் மோதியதில், இளைஞர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

நேற்றுமுன்தினம் பிற்பகல் 4 மணியளவில், செட்டிக்குளம் பிரதான வீதியில் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த இளைஞர் மீது உழவு இயந்திரம் மோதியது.

இதன்போது, முதலியார்குளம் - செட்டிக்குளத்தைச் சேர்ந்த கஜன் (வயது 21) என்பவரே காயமடைந்தவராவார். இவர் பயணம் செய்த சைக்கிள் பலத்த சேதமடைந்துள்ளது.

(01)

### விண்ணாணம் விநாசியர்



இப்பவாவது ஞாபகம் வந்ததே?

## மீன்பிடிப் படகு கவிழ்ந்து இளைஞன் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி கிழக்கு கடலில் படகு கவிழ்ந்து, இளைஞர் ஒருவர் நீரில் மூழ்கி மரணமாகியுள்ளார்.

ஆழியவளையைச் சேர்ந்த சிவலிங்கம் சிறிமுரளிதரன் (வயது 17) என்பவரே உயிரிழந்தவராவார்.

கடல் கொந்தளிப்பாக இருக்கும்நிலையில் -நேற்றுமுன்தினம் மாலை 4 மணியளவில், வடமராட்சி கிழக்கு - ஆழியவளைப் பகுதியில் நான்கு இளைஞர்கள் மீன்பிடிப்பதற்காக கடலுக்குச்சென்றனர். அவ்வேளை கடல் கொந்தளிப்பால், படகு கவிழ்ந்தது. இதனால், அவர்கள் கடலில் மூழ்கினர். இவர்களில் ஒருவரே பரிதாபகரமாக உயிரிழந்தவராவார்.

## சமாதானப் பேச்சுகளில் முஸ்லிம்கள்
# தனித்தரப்பாகப் பங்கேற்கும் பிரேரணைக்கு ஆதரவளிக்க கூட்டமைப்பிடம் கோரிக்கை!

(கொழும்பு)

பேச்சுக்களில் முஸ்லிம்கள் தனித்தரப்பாகப் பங்கேற்கவேண்டும் என்பதை வலியுறுத்தி, நாடாளுமன்றத்தில் கொண்டுவரப்படவுள்ள பிரேரணைக்கு தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு ஆதரவு வழங்கவேண்டுமென, வடக்கு - கிழக்கு முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

நேற்றிரவு தமிழ் தேசிய கூட்டமைப்பு பிரமுகர்களுக்கும், முஸ்லிம் பிரமுகர்களுக்கும் இடையில் இடம்பெற்ற சந்திப்பின்போதே, இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டது.

நேற்றிரவு 8.30 மணிக்கு ஆரம்பித்த பேச்சுக்கள், 11 மணிவரை நீடித்ததாக, இந்தப் பேச்சுக்களில் பங்குபற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லா, (10 ஆம் பக்கம் பார்க்க)

## மன்னாரில் இளம்பெண் மீது பொலிஸார் பாலியல்வல்லுறவு

(மன்னார்)

மன்னார் உயிலங்குளம் பகுதியில் இளம்பெண் ஒருவர் பொலிஸாரால் பாலியல் வல்லுறவுக்குள்ளாக்கப்பட்டார்.

இராணுவப் பாதுகாப்பு வலயத்துக்கு அண்மையாக உள்ள வீட்டில் தனித்திருந்த சமயமே, இவர் இரு பொலிஸாரினால் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டார். இச்சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது,

கடந்த 18 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 7 மணியளவில் வீட்டினுள் நுழைந்த இரு பொலிஸாரினால், பிரின்லி அன்ரனிற்றா (வயது 32) என்ற பெண் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டார். இச்சம்பவம் நடைபெற்று இரு மணிநேரத்தின் பின் வீட்டிற்கு வந்த இவரது சகோதரர், மயக்கமுற்ற நிலையில் இருந்த சகோதரியை மன்னார் வைத்திய (10 ஆம் பக்கம் பார்க்க)

## கிழக்குக் கடலில் நடமாடிய கப்பல் குறித்து கண்காணிப்புக்குழு தகவல் வழங்கியதா? விசாரிக்க பாதுகாப்பு அமைச்சு உத்தரவு!

(கொழும்பு)

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் - விடுதலைப் புலிகளின் ஆயுதக் கப்பல் தொடர்பாக, முன்கூட்டியே தகவலை வழங்கியுள்ளார்களா என்று கண்டறியும்படி பாதுகாப்பு அமைச்சு, கடற்படையைக் கேட்டுள்ளது.

ஆயுதங்களுடன் இருந்த படகொன்று, கண்காணிப்புக் குழுவின் அறிவித்தல் காரணமாக, தப்பிவிட்டதாக கடற்படை முறைப்பாடு தெரிவித்ததன் காரணமாகவே, பாதுகாப்பு அமைச்சு இவ்வாறு கேட்டுள்ளது.

கப்பல் தொடர்பாக தகவல் எவ்வாறு புலிகளுக்கு கிடைத்தது என்று தெளிவுபடுத்துமாறு, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்னாண்டோவும், கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் தயா சந்தகிரியும் கண்காணிப்புக்குழுத் தலைவர் (10 ஆம் பக்கம் பார்க்க)

## ஆசிரியர்களின் அடையாள வேலைநிறுத்தம்; தமிழர் ஆசிரியர் சங்கம் பங்குபற்றாது!
### பொதுச் செயலாளர் மகாசிவம் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

சம்பள உயர்வு உட்பட ஆறு அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து, இன்று நாடளாவிய ரீதியில் நடைபெறவுள்ள ஆசிரியர்களின் அடையாள வேலைநிறுத்தில், இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கம் கலந்துகொள்ளமாட்டாது என, அதன் பொதுச் செயலர்ளர் மகாசிவம் நமது ஈழநாட்டிற்கு நேற்றிரவு தெரிவித்தார்.

வழமைபோலவே நாடளாவிய ரீதியில் - தமிழ் ஆசிரியர்கள் தமது கடமைகளுக்குச் செல்லலாம் எனவும், இந்த அடையாள வேலைநிறுத்தத்தில் பங்குபற்றத் தேவையில்லை எனவும், அவர் தெரிவித்தார்.

அரசாங்கம் ஏற்கனவே ஆசிரியர்களுக்கான சம்பள உயர்வை அதிகரிப்பதற்கு சம்மதம் தெரிவித்துள்ள நிலையில், இந்த அடையாள வேலைநிறுத்தம் அரசியல் பின்னணியைக் கொண்டது எனவும், அவர் மேலும் தெரிவித்தார்.

நாடளாவிய ரீதியில் 40 கிளைகள் எமது சங்கத்தில் உள்ளன.

(10 ஆம் பக்கம் பார்க்க)

EXPOAIR
your friend in the skies...
இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை....
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021 ~ 2223891 2226297
0712348888 0712349999 074512666 012360290 012360291
email . jaffna @ expoavi . com.
(சி -1620)
எக்ஸ்போஎயார்
வான் வெளியில் உங்கள் தோழன்...

# மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தால் யாழ்.செயலகத்தில் நடமாடும் சேவை!

கொழும்பு மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தின் நடமாடும் சேவை - எதிர்வரும் 31 ஆம் திகதி வெள்ளி தொடக்கம் 02 ஆம் திகதி ஞாயிறு வரை, யாழ். மாவட்டச் செயலகத்தில், யாழ். அரச அதிபர் செ.பத்மநாதன் தலைமையில், காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை நடைபெறவுள்ளது.

மேற்படி நடமாடும் சேவையில், கொழும்பு மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் காமினி எஸ்.செனரத் தலைமையில் மேலதிக மோட்டார் போக்குவரத்து ஆணையாளர், பிரதம கணக்காளர், தலைமை அலுவலக உதவி மோட்டார் போக்குவரத்து ஆணையாளர், 12 மோட்டார் வாகனப் பரிசோதகர்கள் உட்பட 26 பேரடங்கிய குழுவொன்று பங்குபற்றவுள்ளது.

மேற்படி நடமாடும் சேவையில் ஆற்றப்படவுள்ள சேவைகள் கீழ்வருமாறு-

1.ஆவணங்கள் தொலைந்தமையால், இதுவரை பதிவுசெய்யப்படாத வாகனங்களை பதிவுசெய்தல். இதன் நிமித்தம், உரிமையாளர் சமர்ப்பிக்க வேண்டிய ஆவணங்கள் வருமாறு-

i.ஆவணங்கள் தொலைந்தமையையும், வாகனம் பற்றிய விபரங்களையும் உறுதிப்படுத்தும் கிராம அலுவலர் ஊடான பிரதேச செயலரின் கடிதம் (ஆங்கிலத்தில்)

ii. அதேபோன்று ஆவணங்கள் தொலைந்தமையையும், வாகனம் பற்றிய விபரங்களையும் உறுதிப்படுத்தும் சமாதான நீதிவானின் கடிதம் (ஆங்கிலத்தில்)

மேற்படி வாகன வகை, இயந்திர அடிச்சட்ட இலக்கங்கள், வாகன நிறம், வாங்கிய திகதி, வாங்கிய நிறுவனத்தின் பெயர் (தெரிந்திருப்பின்) ஆவணங்கள் தொலைந்த காரணம், இதுவரை பதிவுசெய்யாமைக்கான காரணம் போன்றன தெளிவாகக் குறிப்பிடல் வேண்டும்.

iii. கிராம அலுவலரால் உறுதிப்படுத்திய இரண்டு கறுப்பு வெள்ளைப் புகைப்படம்.

iv. கிராம அலுவலரால் உறுதிப்படுத்தப்பட்ட தேசிய அடையாள அட்டை அல்லது கடவுச்சீட்டு (வலுவில் உள்ளது) அல்லது சாரதி அனுமதிப்பத்திரம் அல்லது தபால் அறிமுக அட்டை (வலுவில் உள்ளது) ஏதாவதொன்றின் தெளிவான பிரதியும் அதன் மூலப்பிரதியும்.

v. அத்துடன் - உரிமையாளர் நேரில் வாகனத்துடன் சமுகமளிக்க வேண்டும்.

2. ஆவணங்கள் தொலைந்தமையால், இதுவரை உடமைமாற்றம் செயப்படாத ஆவணங்களை, உடமை மாற்றம் செய்தல் - இவ்விடயம் தொடர்பாக சமர்ப்பிக்கவேண்டிய ஆவணங்கள் கீழ்வருமாறு,

i. ஆவணங்கள் தொலைந்தமையையும், வாகனங்கள் பற்றிய விபரங்களையும், முன்னைய பதிவுசெய்யப்பட்ட உரிமையாளர்களின் விபரங்கள் தெரிந்திருப்பின், அதுபற்றியும் உறுதிப்படுத்தும் கிராம அலுவலர் ஊடான பிரதேச செயலரின் கடிதம் (ஆங்கிலத்தில்)

ii.மேற்கூறியதுபோன்று சகல விபரங்களையும் உள்ளடக்கிய சமாதான நீதிவானின் கடிதம் (ஆங்கிலத்தில்)

மேற்படி கடிதங்களில் - வாகன வகை, இயந்திர இலக்கம், அடிச்சட்ட இலக்கம், வாகன நிறம், வாங்கிய திகதி (உடமை மாற்றத் திகதி), முன்னைய பதிவுசெய்த உரிமையாளர் பெயர், முகவரி, ஆவணங்கள் தொலைந்த காரணம், பதிவுசெய்யாமைக்கான கார்ணம் போன்றன தெளிவாக குறிப்பிடப்படவேண்டும்.

iii. கிராம அலுவலரால் உறுதிப்படுத்திய இரண்டு கறுப்பு வெள்ளைப் புகைப்படம்.

iv. கிராம அலுவலரால் உறுதிப்படுத்தப்பட்ட தேசிய அடையாள அட்டை அல்லது கடவுச்சீட்டு (வலுவில் உள்ளது) அல்லது சாரதி அனுமதிப்பத்திரம் அல்லது தபால் அறிமுக அட்டை (வலுவில் உள்ளது) ஏதாவதொன்றின் தெளிவான பிரதியும் அதன் மூலப்பிரதியும்.

v. அத்துடன் - உரிமையாளர் நேரில் வாகனத்துடன் சமுகமளிக்க வேண்டும்.

3. இதுவரை எம்மிடம் சமர்ப்பிக்கப்பட்ட புதிய சாரதி அனுமதிப்பத்திரங்களைப் பெறுவதன் நிமிர்த்தமான விண்ணப்பதாரிகளுக்கு எழுத்து மற்றும் செயல்முறைப் பரீட்சையை நடாத்துதல் - விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சைத் திகதியை உறுதிப்படுத்தி கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன. கடிதம் கிடைக்காதவர்கள் உடன் யாழ். மோ.போ. திணைக்களத்துடன் தொடர்பு கொள்ளவும்.

4. சாரதி அனுமதிப்பத்திரப் பரீட்சையில் சித்தியடைந்து, தற்காலிக அனுமதிப்பத்திரம்பெற்று, ஒரு வருடமாகியும் நிரந்தர சாரதி அனுமதி அட்டை கிடைக்கப்பெறாதவர்கள், தமது முறையீடுகளை கொழும்பு மோ.போ.ஆணையாளருக்கு எழுத்து மூலம் - (ஆங்கிலத்தில்) சமர்ப்பிக்க முடியும். அதேபோன்று - சாரதி இணைப்பிரதி, சாரதி அனுமதிப் புத்தகங்களை அட்டைகளாக மாற்றுதல், சாரதி அனுமதிப் புத்தகங்களின் அட்டைகளை புதுப்பித்தல் போன்றவற்றுக்கு விண்ணப்பம் செய்தும், இன்றுவரை சாரதி அனுமதிப்பத்திர அட்டை கிடைக்காதவர்கள், தமது முறையீடுகளை- கொழும்பு மோ.போ ஆணையாளருக்கு சமர்ப்பிக்கமுடியும்.

குறிப்பு - பூர்த்திசெய்யப்பட்ட ஒரு தொகுதி சாரதி அனுமதி அட்டைகளும், வாகனப்பதிவுச் சான்றிதழ்களும், தபால்மூலம் அனுப்பி திருப்பிச்சென்ற ஒரு தொகுதி சாரதி அனுமதி அட்டைகளும் எடுத்துவரப்படுவதால், விண்ணப்பதாரிகள் தங்களது அட்டைகள் எடுத்துவரப்பட்டிருப்பின் நேரில் அவற்றைப் பெற்றுக் கொள்ளலாம்.

5.புதிய வாகனப் பதிவும் உடமை மாற்றம், பதிவுச் சான்றிதழின் நகல் பிரதி மற்றும் பதிவுச் சான்றிதழ் திருத்தம்செய்தல் போன்ற வற்றுக்கு விண்ணப்பம் செய்து ஒரு வருடத்துக்கு மேலாகியும் இன்றுவரை கிடைக்கப்பெறாதவர்களும் தமது முறையீடுகளை - கொழும்பு மோ.போ. ஆணையாளருக்கு எழுத்து மூலம் (ஆங்கிலத்தில்) சமர்ப்பிக்கமுடியும்.

6. சாரதி அனுமதிப்பத்திரம் பெறவிரும்பும் அங்கவீனர்களும் தமது கோரிக்கைகளை, நடமாடும் சேவையில் முன்வைக்கலாம்.

7. சக்தியற்றோர் உபயோகிக்கின்ற இதுவரை பதிவுசெய்யாத வாகனங்களுக்குரிய உரிமையாளர்களும், தமது கோரிக்கைகளை நடமாடும் சேவையில் முன்வைக்கலாம்.

8. வேறெந்த மோ.போ.திணைக்கள செயற்பாடுகள் பற்றியும், தங்களது பிரச்சினைகளை நடமாடும் சேவையில் முன்வைக்கலாம் என, யாழ். மாவட்ட உதவி மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் வி.பத்மநாதன் தெரிவித்துள்ளார்.

# வீதியை புனரமைக்குமாறு பொதுமக்கள் கோரிக்கை

(புன்னாலைக்கட்டுவன்)

நயினாதீவு - வங்களாவாடிக்குச் செல்லும் பிரதான வீதி செப்பனிடப்படாமையால், பாரிய குன்றும் குழியுமாக காட்சியளிப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த வீதி குன்றும் குழியுமாகக் காணப்படுவதால், இங்கு சேவையில் ஈடுபட்டிருக்கும் வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் பேரூந்தில் பயணிக்கும் மக்கள்- பல்வேறு அசௌகரியங்களுக்கும் உள்ளாவதாகக் கூறப்படுகிறது.

தற்பொழுது, ஏராளமாக இங்கு வரும் சுற்றுலாப் பயணிகளும் வீதி புனரமைக்கப்படாமையால், பல துன்பங்களை அனுபவிப்பதாகவும் கூறப்படுகின்றது.

வேலணை பிரதேசசபையினரின் ஆளுகைக்குட்பட்ட இவ்வீதி, கடந்த 25 வருடங்களாகச் செப்பனிடப்படவில்லை என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. (83)

### யாழ்.மத்திய கல்லூரியூடாக

# உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களின் கவனத்திற்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி ஊடாக க.பொ.த உயர்தரப்பரீட்சை 2004 ஆம் ஆண்டு இரண்டாம் தடவை உள்வாரியாக விண்ணப்பிக்கும் சகலதுறை மாணவர்களும், தனிப்பட்ட பரீட்சார்த்தியாக வெளிவாரியாக விண்ணப்பிக்கும் சகலதுறை மாணவர்களும், கல்லூரியில் நாளை நடைபெறும் தகுதிகாண் பரீட்சைக்குத் தோற்றவேண்டுமென, கல்லூரி அதிபர் அறிவித்துள்ளார்.

கல்லூரியை விட்டு விலகி, கல்லூரியுடன் எவ்வித தொடர்புகளுமற்ற மாணவர்களை - பரீட்சைக்கு விண்ணப்பித்தும், அவர்கள் பரீட்சைக்குத் தோற்றாது விடுவதும், ஏனோ தானோ என்ற நிலையில் பரீட்சை எழுதி மிகக்குறைந்த பெறுபேறுகளைப் பெறுவதையும் தவிர்க்கும் முகமாகவே, இந்த நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என, கல்லூரி அதிபர் க.இராசதுரை தெரிவித்துள்ளார்.

## சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான பயிற்சி வகுப்பு

(நெடுந்தீவு)

சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான தடைதாண்டல் பரீட்சைக்குரிய பயிற்சி வகுப்புக்கள்- நாளை காலை 9 மணிக்கு, யாழ். வை.எம்.சி.எ.மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்தப் பயிற்சி வகுப்பினை, இலங்கை சமுர்த்தி அதிகாரசபையின் அதிகாரிகள் கொழும்பிலிருந்து வருகை தந்து மேற்கொள்கின்றனர். இது தொடர்பாக, சகல பிரதேச செயலக சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கும் ஏற்கனவே யாழ். செயலகம் ஊடாக அறிவித்தல்கள் அனுப்பப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (113)

## க.பொ.த (சா/த) மாணவர்களுக்கான கருத்தரங்கு

நெடுந்தீவு மகாவித்தியாலத்தில் அந்தப் பிரதேச க.பொ.த (சா/த) மாணவர்களுக்கு, யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினால் நடத்தப்படும் இரண்டாவது கருத்தரங்கு- இன்றுமாலை 3 மணிக்கு இடம்பெறவுள்ளது. எனவே, அனைத்து மாணவர்களையும் இந்தக் கருத்தரங்கில் கலந்துகொள்ளுமாறு பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் கேட்டுள்ளது.

## வீடுகள் அமைத்துக் கொடுப்பு

(புன்னாலைக்கட்டுவன்)

புன்னாலைக்கட்டுவன் தெற்கு கிராம சேவையாளர் பிரிவில் உள்ள ஆறு குடும்பங்களுக்கு - நிகொட் நிறுவனத்தினரால், நிரந்தர வீடுகள் அமைக்கப்பட்டு வருகிறது.

வறுமைக்கோட்டுக்குட்பட்ட, நிரந்த வீடுகள் அற்ற குடும்பங்களுக்கு இந்த வீடுகள் அமைக்கப்பட்டு வருகின்றன. (83)

## உடற்கல்வி டிப்ளோமாதாரிகளுக்கான அவசர கலந்துரையாடல்

உடற்கல்வி டிப்ளோமா பட்டதாரிகள் தமது பதிவினை மேற்கொள்ள வேண்டியிருப்பதால், இன்று பிற்பகல் 2 மணிக்கு நீராவியடியில் அமைந்துள்ள பிறைற்மன் கல்வி நிலையத்திற்கு, அனைத்து உடற்கல்வி டிப்ளோமாதாரிகளும் தங்களது சுயவிபரக் கோவைகளுடன் வருகை தருமாறு, உடற்கல்வி டிப்ளோமாதாரிகள் சங்கத் தலைவர் கேட்டுள்ளார். அத்துடன், இதுவே அவர்களுக்கான பதிவினை மேற்கொள்ளும் இறுதிச் சந்தர்ப்பமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ராஜா யாழ்ப்பாணம்.
ரஜனி, விஜயசாந்தி, குஷ்பு நடித்த
மன்னன்
காட்சிநேரம் 10.30, 2.30, 6.30. 9.30 (பு.நே)
நாளை முதல்
எங்கவீட்டுப்பிள்ளை
24 ஆம் திகதி முதல்
பிதாமகன்
(சி-1619)

நிறைஞ்சனாஸ் சங்கானை
விஜயகாந், சங்கீதா நடித்த
அலெக்சாண்டர்
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பு.நே.)
WAR LOCK -II
(சி-1618)

யா/வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி
பாடசாலைத் தினமும் பரிசளிப்பு விழாவும் -2003
காலம்: 2003 ஒக்டோபர் 21 செவ்வாய்க்கிழமை
நேரம்: 09.30 மணி
பிரதம விருந்தினர்
திரு. க. கனகரத்தினம் (பிரதேச செயலர் – கரவெட்டி)
சிறப்பு விருந்தினர்
திரு.வே. வீரபத்திரபிள்ளை (உதவி பிரதேச செயலர் – கரவெட்டி)
கௌரவ விருந்தினர்
திரு. இ. தயா (பொறுப்பாளர் – அரசியற்பிரிவு, வடமராட்சி)
திரு. கி. தாயகன் (வடமராட்சி வலயக் கல்விக் கழகப் பொறுப்பாளர்)
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்
அதிபர், ஆசிரியர், மாணவர்
பா.அ.ச, ப,மா,ச, ந.வி.ச
விளம்பர அன்பளிப்பு: பழைய மாணவர் சங்கம் (சி/1702)

நமது ஈழநாடு நடாத்தும்
5 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சைக்கான
இலவச முன்னோடிக் கருத்தரங்கு
2003
விபரங்கள் வெகுவிரைவில்
நமது ஈழநாடு நாளிதழில் வெளிவரும்.
அனுசரணை வழங்குவோர்
ஹரிஹரனான் பிறிண்டேர்ஸ்
ஆல்சிலோன் டிஸ்ரிபியூடர்ஸ்
செலான் வங்கி
SEYLAN BANK LIMITED
டிக்கிரி கணக்கு
இலங்கை வங்கி
தேசத்தின் வங்கியாளர்

உடுப்பிட்டி ப.நோ.கூ.சங்கம் (வ/து)
வெற்றிடம்
எமது சங்கத்தின் களஞ்சியத்தில் தொழிலாளர்களாக கடமையாற்ற விரும்புபவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகிறது.
விண்ணப்பதாரர்கள் நல்ல தேகாரோக்கியம் உள்ளவர்களாகவும், 18 வயதிற்குக் குறையாதவர்களாகவும் இருக்க வேண்டும். 5 ஆம் தரத்தில் சித்தியடைந்திருந்தல் விரும்பத்தக்கது. கடமையாற்றும் நாளொன்றுக்கு சம்பளமாக ரூ 225 /- வழங்கப்படும்.
விண்ணப்பங்களை பொதுமுகாமையாளர், உடுப்பிட்டி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், உடுப்பிட்டி என்னும் முகவரிக்கு 31.10.2003 இக்கு முன்னர் அனுப்பிவைக்கவும்.
பொதுமுகாமையாளர் (சி-1703) 20.10.2003.

# அடுத்த வரவு செலவுத் திட்டத்தில் 'மற்' வரி அறிமுகப்படுத்தப்படும்!

(கொழும்பு)

எதிர்வரும் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தில் மற்வரி (Mat) அறிமுகப்படுத்தப்பட இருப்பதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஆகக்குறைந்த சராசரி கிட்டிய வரி என்பதே இதன் பொருளாகும். (Maximum Average Margmal Tax)

வருமான வரியிலிருந்து தப்பிக் கொள்ளும் வர்த்தகர்களையும், வரி செலுத்தச் செய்யும் வகையிலேயே இந்த (Mat) மற்வரி அறிமுகப்படுத்தப்பட இருக்கின்றது. இதன்மூலம் நட்டம் ஏற்படுவதாகக் கூறும் வர்த்தக நிறுவனம் ஒன்று ஆகக்குறைந்த வரியை அரசாங்கத்திற்குச் செலுத்த வேண்டியிருக்கும்.

இதேவேளை, இந்த வரி அறிமுகப்படுத்துவதன் காரணமாக நடைமுறையிலிருக்கும் வற் (Vat) எனப்படும் பெறுமதி சேர் வரி விலக்கிக் கொள்ளப்படுமா? என்பது குறித்துத் தீர்மானிக்கப்படவில்லை. (01)

## புலிகள் - முஸ்லிம்கள் சந்திப்பு

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் முஸ்லிம் தரப்புப் பிரதிநிதிகளுக்கும் இடையிலான சந்திப்பொன்று நேற்று வவுனியாவில் நடைபெற்றது.

வவுனியா பட்டாணிச்சூர் முஸ்லிம் மகாவித்தியாலயத்தில் இடம்பெற்ற நேற்றைய சந்திப்பில் தமிழீழ விடுதலைப்புலிகளின் சார்பில் வவுனியா மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் எழிலன் தலைமையிலான குழுவினர் கலந்துகொண்டனர்.

இந்தச் சந்திப்பில் இருதரப்பினருக்குமிடையிலான நல்லுறவை மேம்படுத்துவது தொடர்பாக ஆராயப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

### வடக்கு - கிழக்கு பாதுகாப்பு நிலைவரம் குறித்து

# இந்திய வெளியுறவு அமைச்சருக்கு ஜனாதிபதி சந்திரிகா விளக்கினார்!



இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜஸ்வந்த் சின்ஹாவிற்கு, ஜனாதிபதி சந்திரிகா வடக்கு - கிழக்கு மாகாண பாதுகாப்பு நிலைமைகளை முழுமையாக விளக்கியுள்ளதாக, ஜனாதிபதி செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

இலங்கை வந்திருந்த இந்திய வெளிவிவகார அமைச்சர், ஜனாதிபதியை சந்தித்தார்.

அரசாங்கம்- விடுதலைப் புலிகளுடன் நடத்திவரும் சமாதானப் பேச்சுவார்த்தைகள் ,அதில் ஏற்படும் சாதக, பாதகங்கள் வடக்கு - கிழக்கு மாகாணப் பாதுகாப்பு நிலைமைகள் ஆகியன குறித்தும் ஜனாதிபதி, இந்திய வெளிவிவகார அமைச்சருக்கு விளக்கியுள்ளார்.

இருதரப்பு விடயங்கள், பொருளாதார விடயங்கள் குறித்தும் ஜனாதிபதியும், இந்திய வெளிவிவகார அமைச்சரும் கருத்துக்களை பரிமாறிக்கொண்டனர் என அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. (01)

# சுயமாகவே புலிகளுடன் இணைந்தோம்; எவரும் எம்மை கட்டாயப்படுத்தவில்லை!

### பெற்றோரிடம் கையளிக்கும் நிகழ்வில் சிறுவர்கள்

"நாங்கள் தாய் நாட்டிற்காகப் போராடி எமது உரிமைகளைப் பெறும் நோக்கிலேயே விடுதலைப் புலிகள் இயக்கத்தில் சுயமாக இணைந்துகொண்டோம். எம்மை எவரும் கட்டாயப்படுத்தி இயக்கத்தில் இணைக்கவில்லை.

ஆனால் எம்மை கட்டாயப்படுத்தி பெற்றோர்களிடம் ஒப்படைக்கின்றார்கள்."

கடந்த வெள்ளிக்கிழமை கரடியனாறு தேனகம் விருந்தினர் விடுதியில் வைத்து கண்காணிப்புக்குழு, யுனிசெப் பிரதிநிதிகளின் முன்னிலையில் வைத்து இயக்கத்தில் இணையவந்த 13 சிறுவர்களை விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள் பெற்றோர்களிடம் ஒப்படைத்த நிகழ்வின்போது ஊடகவியலாளர்கள் கேட்ட கேள்விகளுக்குப் பதிலளித்த சிறுவர்கள் மேற்கண்டவாறு தெரிவித்தனர்.

அவர்கள் தொடர்ந்து கூறுகையில், பெற்றோர்களிடம் எம்மை கட்டாயப்படுத்தி ஒப்படைக்கின்றனர். ஆனால், நாங்கள் தொடர்ந்தும் இயக்கத்தில் பயிற்சிபெற்று எதிரியுடன் போராடி எமது உரிமைகளைப் பெறவே விரும்புகின்றோம் எனத் தெரிவித்தனர்.

# பிரதி சபாநாயகரை நியமனம் செய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும்!

நாடாளுமன்ற பிரதி சபாநாயகர் பதவியை நிரப்புவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது. அடுத்த மாதம் முதல் வாரத்தில் நாடாளுமன்றக் கூட்டத்தொடர் ஆரம்பமாகும்போது, பிரதி சபாநாயகர் பதவியை நிரப்ப அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

அம்பாந்தோட்டை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிறி சந்திர ஹெண்னடியை அந்தப் பதவிக்கு நியமிக்க ஐ.தே.மு அரசாங்கம் முடிவெடுத்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. எதிர்கட்சியின் இந்தப் பதவியில் தமது சார்பில் எவரையும் நியமிக்க நடவடிக்கை எடுக்கவில்லை.

இதனால், தற்போது சந்திர ஹெண்னடி பதவி வகிக்கும் குழுக்களின் பிரதித் தலைவர் பதவியை மொனராகல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஆனந்த குமாரசிறி நியமிக்கப்படவுள்ளார்.

2001 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் ஐ.தே.மு அரசாங்கம் பதவி யேற்ற போதும், பிரதி சபாநாயகர் பதவிக்கு எவரையும் நியமிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# கலாநிதி சரத் அமுனுகம பொ.ஐ. மு. பேச்சாளரல்ல

### டி.எம்.ஜெயரத்தன தெரிவிப்பு

கலாநிதி சரத் அமுனுகம, பொதுஜன ஐக்கிய முன்னணியின் பேச்சாளர் அல்ல என்று, பொதுஜன ஐக்கிய முன்னணியின் பொதுச்செயலாளர் டி.எம். ஜெயரத்ன தெரிவித்தார்

இதுகுறித்து அவர் மேலும், தெரிவிக்கையில் - ஊடகங்கள்தான் சரத் அமுனுகமவை பொ.ஐ. முன்னணியின் ஊடகப்பேச்சாளராக செய்தி வெளியிட்டு வருகின்றன. பொ.ஐ. முன்னணியின் யாப்புப்படி, பொதுச் செயலாளருக்கே கட்சியின் மாற்றங்கள் குறித்து முடிவுகளை- மக்களுக்கு அறிவிக்கும் அதிகாரம் உள்ளதென்றும் அவர் தெரிவித்தார்.



அம்பாறையில் அண்மையில் விடுதலைப் புலிகளுடன் இணையச் சென்ற ஏழு சிறுவர்கள் அவர்களின் பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்ட நிகழ்வில், மாவட்ட துணை அரசியற்துறை பொறுப்பாளர் குயிலின்பன் யுனிசெவ் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடுவதையும், ஒப்படைக்கப்பட்ட சிறுவர்களுடன் உரையாடுவதையும் படங்களில் காணலாம்.

# அரசின் அதிகாரப் பரவலாக்கல் சந்தேகத்தை ஏற்படுத்துகின்றது!

### எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ

தற்போதைய அரசாங்கம் முன்னெடுத்துவருகின்ற அதிகாரப் பரவலாக்கல் சந்தேகத்தை ஏற்படுத்தி வருவதாக, எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் பதுளையில் நடைபெற்ற - போரில் பலியான இராணுவ வீரர்கள் தொடர்பான நிகழ்வு ஒன்றில் உரையாற்றும்போதே எதிர்க்கட்சி தலைவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், அரசாங்கம் போரில் பலியான இராணுவ வீரர்களை மறந்து செயற்பட்டு வருகின்றது. நாட்டின் இறைமையைப் பாதுகாப்பதில் படையினர் வழங்கிய ஒத்துழைப்பை அரசாங்கம் மறந்துவிட்டது.

நாட்டில் நிலவுகின்ற தற்போதைய நிலைமைகள் குறித்து பொதுஜன ஐக்கிய முன்னணி மக்களுக்கு தெளிவாக்கல் நிகழ்ச்சிகளை நடத்தி வருகின்றது. அதற்குரிய நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

தேர்தல் தொகுதி ரீதியாகவும், மாவட்ட ரீதியாகவும் இவ்வாறான நிகழ்ச்சிகள் இடம்பெறவுள்ளன.

அரசாங்கம் சமாதான முன்னெடுப்புக்கள் என்ற பெயரில் நாட்டின் இறைமைக்குக் குந்தகத்தை ஏற்படுத்தி வருவதை மக்கள் அறிந்து கொள்ள வேண்டும். அதற்கான முயற்சியாகவே பொதுஜன ஐக்கிய முன்னணி இவ்வகையான பேரணிகளையும் ஆர்ப்பாட்டங்களையும் ஏற்பாடு செய்துவருகின்றது.

- இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ மேலும் தெரிவித்தார். (01)

### காலி மாவட்டத்தில் இடம்பெற்ற

# கைக்குண்டுத் தாக்குதலில் மாணவன் பலி; 32 பேர் காயம்!

காலிமாவட்டத்தில் இடம்பெற்ற கைக்குண்டுத் தாக்குதல் ஒன்றில் பாடசாலை மாணவன் ஒருவர் பலியானதுடன் 32 பேர் காயமடைந்தனர்.

காலி மாவட்டத்தில் கராப்பிட்டிய என்ற இடத்தில் நேற்றுக் காலை இடம்பெற்ற இந்தச் சம்பவம் குறித்துத் தெரியவருவதாவது,

இராணுவச் சிப்பாய் ஒருவருக்கும் அவருடைய மனைவிக்கும் இடையில் ஏற்பட்ட தகராறு காரணமாக இராணுவச் சிப்பாயின் மனைவி தன்னுடைய தயாரின் வீட்டுக்குச் சென்றுள்ளார். மனைவிமேல் இருந்த கோபத்தின் காரணமாக மனைவி தங்கியுள்ள வீட்டின் மீது குறித்த இராணுவச் சிப்பாய் கைக் குண்டை வீசினார்.

மேற்படி கைக்குண்டு வீச்சு இடம்பெற்ற வேளையில் அந்த வீதியால் சென்றுகொண்டிருந்த பாடசாலை மாணவன் பலியானதுடன், வீதியால் சென்றுகொண்டிருந்த 32 பேர் காயமடைந்தனர்.

காயமடைந்தோரில் அநேகமானோர், பாடசாலை மாணவர்களாவர். இவர்கள் கராப்பிட்டிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

குண்டுத் தாக்குதல் நடத்திய இராணுவச் சிப்பாயை பொலிஸார் உடனடியாகக் கைதுசெய்தனர். அத்துடன், அந்தப் பகுதியில் மேலதிக ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

## அரச எதிர்ப்பு ஊர்வலம் 24 இல் நடைபெறும்

கொழும்பில் நடாத்தப்படவிருக்கும் சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் அரசாங்க எதிர்ப்பு ஊர்வலம், எதிர்வரும் 24 ஆம் திகதி நடைபெறவுள்ளது. இதில் ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களும் பங்கேற்கவிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, ஜனாதிபதிக்கு எதிராகத் தொடர்ந்து செயற்பட்டால், நாட்டு மக்களுக்கு அது நன்மை தராது எனவும், ஒவ்வொரு புதன் கிழமை தோறும் அமைச்சரவையில், ஜனாதிபதியுடன் இணைந்து அபிவிருத்தித் தீர்மானங்கள் மேற்கொள்வதாகவும் அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார். (01)

# அரச ஊழியரின் வேலைநேர கட்டுப்பாடுகள் நீக்கப்படும்!

அரசாங்க ஊழியர்களின் வேலை நேரக் கட்டுப்பாடுகள் நீக்கப்படவிருப்பதாக, பொது நிர்வாக அமைச்சர் வஜிர அபேவர்த்தன தெரிவித்தார். இதன்படி, ஊழியர்கள் தமது பணிகளுக்குச் சமுகமளிப்பது மற்றும் பணி முடிந்து செல்வது என்பவற்றின்போது நேரக்கட்டுப்பாடுகள் கவனிக்கப்படமாட்டாது.

ஊழியர் ஒருவர், தமக்கு திணைக்கள அதிகாரி வழங்கும் பணியை உரியமுறையில் முடித்துக் கொடுத்தால், அவர் வீடு திரும்ப முடியுமென அறிவிக்கப்பட்டுள்ளது. மேலதிக வேலை நேரக் கொடுப்பனவை ரத்துச் செய்யும் இந்த முயற்சி முதன் முறையாகப் பொது நிர்வாக அமைச்சின் கீழ்வரும் திணைக்களங்களில் பரீட்சார்த்தமாக அமுல் செய்யப்படவிருக்கின்றது. (01)

# அச்சுறுத்தல் நிறைந்த காலப்பகுதியில் துணிந்து செயலாற்றியவர் நிமலராஜன்

## நினைவுக் கூட்டத்தில் சிவாஜிலிங்கம் உரை

உயிராபத்துக்கள், அச்சுறுத்தல்கள் தன்னைத் தொடர்வது தெரிந்தும், தனது பத்திரிகைத் துறையை இறுதிவரை தொடர்ந்தவர் தான் நிமலராஜன் என யாழ்- மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவாஜிலிங்கம் நேற்றுமுன்தினம், வட இலங்கைப் பத்திரிக்கையாளர் சங்க அலுவலகத்தில் நடைபெற்ற நிமலராஜனின் 3 ஆம் ஆண்டு நினைவுக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் -

அச்சுறுத்தல்கள் நிறைந்த காலப் பகுதியில் செயலாற்றியவர் நிமலராஜன். பல செய்தி நிறுவனங்கள், செய்தியாளர்களை நியமிக்க அஞ்சியகாலம் - செய்தியாளர்கள் பலர் புனைபெயர்களில் செயற்பட்ட வேளை, தனிநபராகச் செயற்பட்டவர் நிமலராஜன். தனது இறுதி நெருங்குவதை, மரண அச்சுறுத்தலை தனது நண்பர்கள் பலரிடம் கூறியிருந்தார். அன்றைய அரசின் கோழைத்தனமான செயலால், கோரமானமுறையில் இவர் கொல்லப்பட்டார்.

1985 ஆம் ஆண்டு காலப்பகுதியில், நாம்கூட செய்தியாளர்களை சந்திக்கும்போதுதான் செய்திகளைப் பெறமுடிந்தது. நிமாலின் மரணச் சடங்கில் கலந்துகொள்ளவே அன்று பலர் தயங்கினார்கள்.

நிமாலின் நினைவு தொடர்ந்து நிகழ்த்தப்படவேண்டும். அந்தவகையில், நிமால் ஞாபகார்த்தமாக புலமைப்பரிசில்களையோ, பத்திரிகையாளர்களுக்கான விருதுகள், பயிற்சிகளையோ, ஏற்பாடு செய்தால், அதற்கான பூரண ஆதரவு வழங்கத் தான்தயாராக இருப்பதாகவும், அவர் மேலும் தெரிவித்தார். (111)


வாழ்க வளமுடன்

இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

முதலாவது அகவையில்



பெயர் : ஜீ.சுருதிகா
முகவரி : தபாற்கந்தோர் வீதி, முல்லைத்தீவு.

இரண்டாவது அகவையில்



பெயர் : இ.பாதுஷா
முகவரி : கரம்பைக் குறிச்சி, வரணி கிழக்கு.

ஏழாவது அகவையில்



பெயர் : சி.சுகன்ஜா
முகவரி : நவனம் தோட்டம், அல்வாய் தெற்கு.

பத்தாவது அகவையில்



பெயர் : றெ.றஜீவன்
முகவரி : கனால் வீதி, மாதகல்.

பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர்:------------------------------
முகவரி :------------------------------
பிறந்த ஆண்டு:------------------------------
கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

--------------------
பெற்றார் ஒப்பம்




புத்தூர் கிழக்கு ராஜன் முன்பள்ளியும், குருநாதர் முன்பள்ளியும் இணைந்து நடத்திய விளையாட்டு விழாவில் - பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்ட கோப்பாய்ப் பிரதேசப் பொறுப்பாளர் யாழவன் தேசியக் கொடி ஏற்றுவதைப் படத்தில் காணலாம். (110)

### விதவைக் குடும்பங்களுக்கு கோழி வளர்ப்பு உதவி

வடமராட்சி கிழக்கில், வன்செயலால் பாதிக்கப்பட்ட, வறுமைக் கோட்டின்கீழ் வாழும் - விதவைக் குடும்பங்களுக்கு “மூவிங் மொன்ட்” நிறுவனம் முட்டையிடும் பருவத்தில் உள்ள 6 மாத கோழிகளை வழங்கியுள்ளது.

மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள, மீள்குடியேற்றம் நடைபெற்ற, செம்பியன்பற்று தொடக்கம் போக்கறுப்பு வரையிலான 9 கிராம அலுவலர் பிரிவிலுமுள்ள, 145 விதவைக் குடும்பங்களுக்கு, தலா 10 முட்டையிடும் கோழிகளையும், அதற்குரிய கூடும், உணவுகளும் மானியமாக வழங்கப்பட்டுள்ளன.

உதவி அரசாங்க அதிபரின் அனுசரணையுடனும், கிராம அலுவலர்களின் உதவியுடனும் இக் குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (122)

## தீவகப் பாடசாலைக்கு மாணவர் விடுதி அமைப்பு

(புன்னாலைக்கட்டுவன்)

தீவகக் கல்வி வலயத்திற்குட்பட்ட - வேலணை சேர் வைத்திலிங்கம் துரைசாமி வித்தியாலயத்தில் அமைந்துள்ள, மாணவர் விடுதிகள் 20 லட்சம் ரூபா செலவில் புனரமைக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப் படுகிறது.

கடந்தகால போர்ச் சூழலால் பாரியளவில் பாதிப்படைந்த இந்த மாணவர் விடுதிகள் -புனரமைக்கப் படுவதன் மூலம், எதிர்காலத்தில் மாணவர்கள் விடுதியில் தங்கியிருந்து கல்வி கற்கமுடியும்.

அத்துடன், கடல் கடந்துள்ள எழுவைதீவு, அனலைதீவு மாணவர்கள் உயர் வகுப்புக்களில் கல்வியைத் தொடர்ந்து பெறுவதில் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு - தீர்வாக அமையுமென்றும் நம்பப்படுகிறது.

தற்பொழுது யாழ். மாவட்டத்தின் பல பாடசாலைகளில் அமைந்துள்ள விடுதிகளில் கூடுதலான மாணவர்கள் தங்கியிருந்து கல்வியைத் தொடர்வது குறிப்பிடத்தக்கது. (83)

## சட்டவிரோத மதுபான விற்பனை நயினாதீவுப் பகுதியில் அதிகரிப்பு

(புன்னாலைக்கட்டுவன்)

நயினாதீவில் - அண்மைக்காலமாக சட்டவிரோத மதுபான விற்பனை, அதிகளவில் இடம்பெறுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இங்கு, குடிமனைகளில் வைத்தே மதுபானம் விற்கப்படுவதாகவும், அருகிலே இரு பாடசாலைகள் அமைந்திருப்பதாகவும் கூறப்படுகிறது.

மேலும், கடந்த மூன்று மாத காலத்திற்குமுன் - சட்டவிரோத மதுபான விற்பனையில் ஈடுபடுபவர்கள் தொடர்பாக, இந்தப் பிரதேச மக்களால் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டதாகவும், பின் அங்கு வந்து சோதனை மேற்கொண்ட பொலிஸார் - எந்தவிதமான நடவடிக்கைகளும் எடுக்கவில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது.

தரைவழித் தொடர்புகளற்ற இந்தத் தீவிற்கு - யாழ்ப்பாணத்திலிருந்து குறிகட்டுவான் ஊடாக, மதுபானங்கள் எடுத்துச்செல்லப்படுகிறது.

ஆனால், சகல சோதனைச் நிலையங்களூடாகவும் தப்பி, எவ்வாறு மதுபானம் கொண்டுவரப்படுகின்றது. எனக் கேள்வியெழுப்பும் மக்கள் - இங்கு சட்டவிரோத மதுபான விற்பனையைக் கட்டுப்படுத்த, கலாசாரத்தைப் பேணும் இளைஞர்களின் உதவி நாடப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (83)

### மாபெரும் நட்சத்திர இரவு

இணுவில் தாவடி பொதுநூலக அபிவிருத்தி நிதிக்காக, புரட்சிப் பாடகர் எஸ்.ஏ.சாந்தன் - முதன் முதலாக யாழ். மாவட்டத்தின் முன்னணி இசைக் குழுவான ராகம்ஸ் இசைக் குழுவுடன் இணைந்து வழங்கும் மாபெரும் “நட்சத்திர இரவு“ எதிர்வரும் 24 ஆம் திகதி தீபாவளி தினத்தன்று மாலை 6.30 மணிக்கு கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது. (88)

## மருதங்கேணியில் வீதிகள் புனரமைப்பு

வடமராட்சி கிழக்கு - மருதங்கேணிப் பிரதேசத்தில் 6 வீதிகள், உலக உணவுத்திட்டத்தின் உதவியுடன் புனரமைக்கப்பட்டு வருகின்றன.

இதில். செம்பியன்பற்று - தனிப்பனை வீதி, உடுத்துறை - நாவலடி, வாரிவட்டம் வீதி, அரசடி வீதி என்பன புனரமைக்கப்பட்டும், மருதங்கேணி கடற்கரைப் பிள்ளையார் கோயில் வீதி, கேவில - நித்திய வெட்டை வீதி, சுமைதாங்கி - கொடுக்கிளாய் வீதி என்பன புதிதாக அமைக்கப்பட்டும் வருகின்றன.

பருத்தித்துறை பிரதேச சபையினரின் மேற்பார்வையுடன், அந்தந்தப்பகுதி மக்களினால், களிமண்ணினால் இந்த வீதிகள் அமைக்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. (121)

### மரத்திலிருந்து விழுந்த சிறுவன் படுகாயம்

தென்னை மரத்திலிருந்து விழுந்த சிறுவன் - படுகாயமுற்ற நிலையில், யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளான்.

கிளிநொச்சி 5 ஆம் வாய்க்காலைச் சேர்ந்த கந்தசாமி நாகராசா (வயது 16) என்ற சிறு வனே- 20 அடி உயரமான தென்னை மரத்திலிருந்து விழுந்ததில், தனது வலது கை முறிந்தநிலையில், யாழ் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளான்.

## வடமராட்சி கிழக்கில் முதியோர் தினவிழா

வடமராட்சி கிழக்கு - உதவி அரசாங்க அதிபர் பிரிவின் சிறுவர், முதியோர் தினவிழா, எதிர்வரும் 22 ஆம் திகதி, புதன்கிழமை மருதங்கேணி உதவி அரச அதிபர் அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

உதவி அரச அதிபர் வி.ப.வேலாயுதபிள்ளை தலைமையில் நடைபெறும் இந்த விழாவில், மருதங்கேணி கோட்டக்கல்வி அதிகாரி பா.இரகுநாதன் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்ளவுள்ளார்.

இந்த நிகழ்வில் கோட்டமட்டத்தில் நடைபெற்ற, பாடசாலை மாணவர்களுக்கான கவிதை, கட்டுரை, பேச்சுப் போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்குப் பரிசில்களும் வழங்கப்படும். (122)



# சீனா விண் வெற்றி

சீனநாட்டு மக்கள் தற்போது மகிழ்ச்சியுடன் காணப்படுகிறார்கள். முதல் தடவையாகச் சீனாவின் கன்னி விண்வெளிப்பயணம் வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டிருக்கின்றது. நாடுமுழுவதும் பெரிய திரைகள் மூலம் இந்த நிகழ்ச்சி நேரடியாக ஒளிபரப்பப்பட்டது. மக்கள் நெஞ்சினை நிமிர்த்தி, தங்களுடைய தேசத்தின் வெற்றியை ஆனந்தக்கண்ணீருடன் அனுபவித்தது நெஞ்சை நெகிழச்செய்தது. இந்த வெற்றி அமெரிக்காவிற்குப் பலத்த சவாலாக இருக்கும் என்பதில் ஐயமில்லை. இந்த வெற்றிமூலம், சீனாவின் பலம் அதிகரிக்கின்றது. 40 வருடகாலம் செய்த முயற்சியின் விளைவு தான், இந்த வெற்றி என்று சீனவிஞ்ஞானிகள் பெருமைப்படுகிறார்கள். சீனத்தாயின் குழந்தைகளின் 1000 வருடங்களாக இருந்த கனவு பலித்திருக்கின்றது என்று ஒரு அறிஞர் கூறுகின்றார்.

சீனாவின் முதல் விண்வெளி வீரன் யங்லீவி கூறுகையில்- இது எனக்குக் கிடைத்த வரப்பிரசாதம் என்கிறார்.

ஆனால் அமெரிக்காவும், ரஷ்யாவும் முதல் தடவையாக செய்த முயற்சிகளைவிட, சீனா செய்தது அதியுன்னத செயற்பாடு. சீனாவிலே காணப்படும் சில அரசியல் சிக்கல்கள் இந்த விண்வெளிச் செயற்பாடுகளைத் தடுத்துக்கொண்டு வருகின்றன. 1964 ஆம் ஆண்டு முதன்முதலாக அணுப்பரிசோதனை நடாத்தப்பட்டது. ஆனால், அதற்குப் பிறகு குறிப்பிடத்தக்க முன்னேற்றம் எதுவும் காணப்படாமல் இருந்த சீனாவில், விண்வெளிப்பரிசோதனை என்பது ஒரு சிறந்த செயற்பாடாகும்.

# புதிய தவளை இனம்



டைனோசர் காலத்தைச் சேர்ந்தது எனக் கருதப்படும் தவளை இனத்தை - இந்தியாவின் மேற்குப் பக்கத்தில் அமைந்த "காற்" மலைப்பிரதேசத்தில் கண்டுபிடித்துள்ளார்கள். இது புதிய வகையைச் சார்ந்தது மாத்திரம் அல்லாது, புதிய ஒரு குடும்பத்தையும் சார்ந்தது எனவும் கூறப்படுகின்றது. இன்று உலகில் 4800 தவளை இனங்கள் காணப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவை 29 குடும்பங்களாகத் தொகுக்கப்பட்டுள்ளன. இவை 1800 களில் வகுப்பாக்கம் செய்யப்பட்டன. பெல்ஜியத்திலுள்ள புறுசெல் பல்கலைக்கழத்தைச் சேர்ந்த பிராங்கி பொசுயாட், பியூ ஆகிய இருவரினால் - பருத்த உடலையும், கூராக மூக்குப் பகுதியையும் கொண்ட இப்புதிய இனம் கண்டுபிடிக்கப்பட்டது.

இவ்வினத்தின் உருவத்தில் - சிசெல்ஸ் என்ற நாட்டிலும் ஒரு இனம் காணப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தியாவும், சிசெல்ஸும் 65 மில்லியன் ஆண்டுகளுக்கு முன் பிரிக்கப்பட்டுள்ளது. இந்த இனத் தவளை-நிலத்திற்குள் சிறிய பொந்துகளில் வாழ்வதாகவும், இவை போன்று வேறு இனங்களும் அந்தவிடத்தில் காணப்படலாம் எனவும், இந்த ஆய்வில் ஈடுபட்டவர்கள் தெரிவித்துள்ளனர்.



# திபெத்தில் அழியும் விலங்குகள்



உலகளாவியரீதியில் மிருகங்களை வேட்டையாடுவோர்கள் மீது, கடும் நடவடிக்கை எடுக்கப்பட்டுக் கொண்டு வருகின்ற நிலையில், திபெத் நாட்டில் தனிக்காட்டு ராஜாக்களாக இயங்கிக்கொண்டு வருகின்ற, ஒருகும்பல் அடையாளம் காணப்பட்டுள்ளது. ஏறக்குறைய 1200 மிருகங்களின் இனங்கள், திபெத் நாட்டின் மலையடிவாரங்களில் காணப்படுகின்றன. பெரும்பாலும் - புலிகள், சிறுத்தைகளே இங்கே அதிகமாகக் காணப்படுகின்றன.

அண்மையில் எடுக்கப்பட்ட தகவல்களின்படி, ஏறத்தாழ 795,000 அமெரிக்க டொலர்கள் பெறுமதியான மிருகங்கள் வேட்டையாடப்பட்டிருக்கின்றன.

இதற்கு நேபாள நாட்டைச் சேர்ந்த ஒரு கூட்டமும் உடந்தை என அறியப்பட்டிருக்கின்றது. கடந்த வியாழக்கிழமை இரவு எல்லாமாக 32 புலிகள், 579 சிறுத்தைகள் மற்றும் 665 வேறு பெறுமதி வாய்ந்த மிருகங்கள் ஒரு ட்ரக் வண்டியில் பிடிக்கப்பட்டு கடத்தப்படும்பொழுது - பொலிஸாரால் பிடிக்கப்பட்டிருக்கின்றன.

கூடுதலான மிருகங்கள் சுடப்பட்டு உள்ளதாகக் கூறப்படுகின்றது. 1999 ஆம் ஆண்டுக்குப் பின்பு திபெத் மலையடிவாரங்களில் தொடர்ச்சியாக மிருகங்கள் வேட்டையாடுவது அதிகரித்துக்கொண்டே வருகின்றது. இது தடுக்கப்பட்டாவிட்டால், அங்கு மிருகங்கள் அழிவதை தடுக்கமுடியாது.



# இரும்பு சுவாசப்பை

64 வயதுள்ள ஜோன் பிரெஸ்விக் - போலியோ நோயினால் 17 வயதாக இருக்கும்போது பாதிக்கப்பட்டிருந்தார். இவரது சுவாசப்பையின் மூலம், இவரால் சுயமாகச் சுவாசிக்கமுடியாது இருந்தார். இவரது நெஞ்சுக்குழிக்குள் அமைந்துள்ள பிரிமென்தகடு சுயமாக அசைய முடியாததால், சுவாசப்பை சுருங்கி, விரிந்து மூச்சுக்காற்றை உள்ளிழுக்கவோ, வெளியிடவோ முடியாதநிலையில் இருந்தது.

இதனால், பாரியளவிலான இயந்திர சுவாசப்பை ஒன்று இவரது உடலில் பொருத்தப்பட்டுள்ளது. இவரது தொண்டைப்பாகத்திலிருந்து பாதம்வரை முற்றாக இந்த இயந்திரத்தால் காற்று புகமுடியாத வண்ணம் மூடப்பட்டுள்ளது. விரும்பும் நேரத்தில் காற்றை உள்ளே செலுத்தவோ, வெளியேற்றவோ ஏற்றவாறு இந்த இயந்திரம் அமைக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொருமுறையும் காற்றை உள்ளே செலுத்தும்போது, வயிற்றுப் பாகத்தை அமிழ்த்துகின்றது. இதன்மூலம் சுவாசப்பை சுருங்கி - மூச்சுக்காற்று வெளியேறுகின்றது. மேலும், இயந்திரத்தின் உட்பகுதியில் காற்றுவெளியேற்றும்போது, வயிற்றுப் பாகம் விரிவடைவதால், சுவாசப்பை விரிகின்றது. இதன்மூலம் காற்று வெளியிலிருந்து உள்ளெடுக்கப்படுகின்றது. இவ்வாறு தொடர்ந்து செயற்படுவதால், இவரால் சுவாசிக்க முடிகின்றது.

இந்த இயந்திரம் செயலிழந்தால், அடுத்த கணமே இவரது உயிர் பிரிந்துவிடும் என லண்டனிலுள்ள சென்தோமஸ் வைத்தியசாலை அதிகாரிகள் தெரிவிக்கின்றார்கள்.

# அப்பிள் கணினியே



உலகிலுள்ள மக்கள் அனைவருக்கும் புதியவகை கணினிகளைப் பாவிக்கவேண்டும் என்ற அவா இருந்து வருகின்றது. அதற்கு ஏறக்குறைய 100 மில்லியன் அமெரிக்க டொலர்கள் தேவைப்படும். ஆகவே, மக்கள் தங்களுடைய மனதில் தோன்றும் ஆசைக்கேற்ப, கணினிகளை வாங்க முடியாது. உலகளாவியரீதியில் முதல் தரமான கணினி நிறுவனமான அப்பிள் நிறுவனம், ஏறக்குறைய 5 மில்லியன் அமெரிக்க டொலர்கள் பெறுமதியான சிறப்பான கணினி ஒன்றைக் கொடுத்திருக்கின்றது. இதனுடைய பெயர் அப்பிள் **G5** என்பதாகும். இது ஏறக்குறைய 1 செக்கனுக்கு 17.6 திரில்லியன் செயற்பாடுகளைச் செய்யவல்லது. இதனுடைய கொள்வனவு 176 டெராபைட்ஸ் ஆகும். இதனுடைய மூளை 4 ஜிகாபைட்ஸ் ஆகும். ஆகவே, இதனுடைய வேகமும் ஒப்பீட்டளவில் அதிகமாகும். ஏறத்தாள 2,900 வலையமைப்புக்களை இதன் மூலம் ஏற்படுத்தக்கூடியதாக இருக்கும். இந்த நிறுவனத்தில் இதனைமேற்கொண்ட டாக்டர் ஶ்ரீநிதி வரதராஜன் என்ற பெண்மணி கூறுகையில், இது இதய அறுவைச் சிகிச்சைக்காகவே உருவாக்கப்பட்டதாகக் கூறுகின்றார். அந்தக் கணினிமூலம், வெப்பமாற்றம் மற்றும் நீரினுடைய விநியோகமுறைகள் ஆகியவற்றினைக் கட்டுப்படுத்தக் கூடியவாறு இருக்கும். அத்துடன், மின்சார உற்பத்தியிலும் இதற்கு ஓரளவு பங்குண்டு.

தற்போது 238 கணினிகள் இந்த வடிவமைப்பில் தயாரிக்கப்பட்டிருக்கின்றன. இது சர்வதேசக் கணினி தரப்படுத்தலுக்கு அனுப்பப்பட இருக்கின்றது. அங்கே கிடைக்கின்ற வெற்றியைப் பொறுத்து, இது வருடத்துக்கு நூற்றுக்கணக்கான மில்லியன் அமெரிக்க டொலர்களைத் தரக்கூடியதாக இருக்கும் என்பது உற்பத்தியாளர்களின் கணிப்பு.

# விஞ்ஞானத்தின் தந்தை டால்ரன்



இன்று இயற்கையில் காணப்பட்ட பல இரசாயனப் பொருட்களின் மூலக்கூறுகளை மீண்டும் இணைப்பதன் மூலமோ அல்லது அதன் கட்டமைப்புக்களை மாற்றுவதன் மூலமோ பல இரசாயனப் பொருட்களைக் கண்டுபிடிப்பதில் விஞ்ஞானத்துறைக்கு வித்திட்டவர் "யோன் டால்ரன்"எனப்படும் விஞ்ஞானி ஆவார்.

எந்த உலோகத்தையும், பொன்னாக மாற்ற முடியுமென்ற (**ALCHEMIST**) அல்செமிஷ்டுகளின் கருத்தைப் பொய்யென நிரூபித்து, ஒவ்வொரு உலோகத்திற்குள்ளும் ஒரு அணுக்கட்டமைப்பு உண்டு என்ற கருத்தை 1803 ஆம் ஆண்டு 21 ஆம் திகதி ஒக்ரோபர் மாதம் மன்சஸ்டரிலுள்ள இலக்கியம், தத்துவம் தொடர்பான சபையில் முன்வைத்தார்.

நவீன விஞ்ஞானத்தில் இரசாயனத்திற்குரிய இடத்தை உருவாக்குவதற்கு, இவரின் அணுக் கொள்கைகள் காரணமாக அமைந்திருந்தது. தண்ணீரைப் பற்றி சிந்திக்கும்போது, அதன் மூலக்கூறுகளின் கட்டமைப்பையும் சிந்திக்கத் தூண்டியவர். "டால்ரன்" என நோபல் பரிசு பெற்ற விஞ்ஞானி "சேர் கரி குரோட்டோ" தெரிவித்துள்ளார்.

விஞ்ஞானரீதியாக அணு ஒரு முக்கிய இடத்தில் இருப்பதாக, மான்சஸ்டர் பல்கலைக்கழகத்தில் விஞ்ஞானம் தொடர்பாக சரித்திர ஆய்வில் ஈடுபட்டுள்ள "ராஜ்குமாரி வில்சன்" தெரிவித்துள்ளார்.

வாயுக்கள் எவ்வாறு திரவங்களில் கரைகின்றன என்றும், நீரில் கரையும் வாயுக்களின் அளவு அந்த வாயுக்களின் மூலக்கூறின் தங்கியுள்ளதென்பதையும் நிருபித்தார்.

இந்தக் கண்டுபிடிப்பு - பொருள் ஒன்றின் அணுநிறையை வகைப்படுத்துவதற்குப் பேருதவியாக அமைந்தது.

இன்று இரண்டு பொருட்களை இணைத்து புதியபொருள் ஒன்றை உருவாக்குவதற்கு, எந்த விகிதத்தில் கலக்க வேண்டும் என்ற கணிப்பை உருவாக்க உதவியாக இருந்தது.

இவர் காலநிலை தொடர்பான பல ஆய்வுகளிலும் ஈடுபட்டிருந்தார். நிறக்குருடு நோயினால், தனது இளமைக்காலத்தில் கஷ்டமடைந்தார். இதனால் இவரின் நிறக்குருடோடு தொடர்புள்ள கண்டுபிடிப்பான டால்ரோநிசம் (**Daltonism**) வைத்திய துறையில் உபயோகிக்கப்படுகிறது.



# மரபணுவில் மாற்றம் செய்யப்பட்ட தாவரங்களின் சந்தேகங்கள்

மரபணுக்களில் மாற்றம் செய்யப்பட்ட தாவரங்கள் தொடர்பாக, நடாத்தப்பட்ட பரிசோதனைகள், பல சந்தேகங்களை உருவாக்கியுள்ளன. சீனிக்கிழங்கு, எண்ணை வித்து, சோளம் ஆகியவற்றின் மரபணுக்களில் அவற்றின் தன்மைகளை மாற்றுவதற்காக, அவற்றின் மரபணுக்களில் மாற்றங்களைச் செய்திருந்தார்கள்.

சீனிக்கிழங்கு, எண்ணைவித்து ஆகியன தோட்டங்களில் காணப்படும். களைகளையும், பூச்சிகளையும் பாதிப்படையச் செய்கின்றன. இதனால், காட்டு விலங்குகளின் அடிப்படைத் தேவைகளை ஈடுசெய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக அறியப்பட்டிருந்தது. மேலும், மரபணுவில் மாற்றம் செய்யப்பட்ட தாவரங்களுக்குப் பிரத்தியேகமான களைகொல்லிகளைப் பாவிக்கவேண்டியுள்ளதாகவும், இவை - சிறுபூச்சிகள் உணவாகப் பாவிக்கும் தாவரங்களை அழித்துவிடுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# குழந்தை ஒன்று

மூன்று பெற்றோர்களைக்கொண்ட குழந்தை ஒன்றை உருவாக்குவதில் சீனாவிலுள்ள விஞ்ஞானிகள் வெற்றியடைந்துள்ளார்கள்.

30 வயதுள்ள சீனாவைச் சேர்ந்த பெண் ஒருவர் - நீண்டகாலமாகக் கருக்கட்டல் தொடர்பான பிரச்சினையால், பிள்ளை ஒன்றைப் பெற்றுக்கொள்ளமுடியாத நிலையில் காணப்பட்டார்.



குறிப்பாக, இந்தப் பெண்ணின் கருமுட்டை பலம் குன்றியதாகக் காணப்பட்டது. இந்தப் பிரச்சினையை வெற்றிகொள்வதற்கு, பெண்ணின் கருமுட்டையைப் பலப்படுத்தவேண்டி இருந்தது. இதனால், இப்பெண்ணின் கருமுட்டையிலிருந்து மையக்கருவை அகற்றிய பின் - வேறொரு ஆரோக்கியமான பெண்ணின் முட்டையுள் - இப்பெண்ணின் மையக்கருவைச் செலுத்துவதன் மூலம், இப்பெண்ணின் முட்டையை ஆரோக்கியமானதாக மாற்றியிருந்தார்கள்.

இம்முறை - மூலக்கருக்களை மாற்றீடு செய்யும்முறையென அழைக்கப்படுகின்றது. இதன் இறுதிநிலையாக, ஒரு ஆணின் விந்துடன் இணைந்து கருக்கட்டல் செய்யப்பட்டபின், பெண்ணின் கருப்பைக்குள் செலுத்தப்பட்டுள்ளது.

## பெற்றோர் மூன்று

இதன்மூலம் மூன்று குழந்தைகள் உருவாகி இருப்பதை அவதானித்தார்கள். மேலும் ஒன்றைக் கருக்கலைப்புச் செய்திருந்தார்கள். மிகுதி இரு சிசுக்களும் 5 ஆவது மாதத்தில் குறைப்பிரசவமாகப் பிறந்திருந்தன.

வலிமை குறைந்த பெண்முட்டையைக் கொண்டுள்ள பெண்களுக்கு, இம்முறை சிறந்த பயனைத்தரக்கூடியதென வைத்தியர்கள் தெரிவித்தார்கள்.

இந்தமுறை - பிரித்தானியாவில் தடைசெய்யப்பட்டுள்ளது. இது இயற்கையான செயற்பாடுகளுக்கு எதிரானதெனப் பிரித்தானிய விஞ்ஞானிகள் தெரிவித்திருந்தார்கள்.

# கடற்புற்களுக்கு ஆபத்து

கடற்புற்கள் என அழைக்கப்படும் ஆழம் குறைந்த கடற்கரைப் பிரதேசங்களில் காணப்படும் ஒரு வகைப் புல்லினம் மிக வேகமாக அழிந்துகொண்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



இதனால், கடல்வாழ் உயிரினங்களான- கடல்குதிரை, ஆமை போன்றன தமது வாழ்விடத்தை இழந்துவருகின்றன.

கடந்த 10 ஆண்டுகளில் 15 வீதப் புற்கள் அழிந்துவிட்டதாக ஆய்வுகள் தெரிவித்துள்ளன. கடலரிப்பைத் தடுப்பதற்கும் இந்தப் புல் இனம் உதவியாக உள்ளது.



பிரித்தானியாவிலுள்ள உலக சூழல் பாதுகாப்பு கண்காணிப்பு மையம் - ஐக்கிய நாடுகளின் உதவியுடன் இந்த ஆய்வை மேற்கொண்டுள்ளது.

உலகில் 60 வகையான கடல்புல் வகைகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இது உஷ்ண வலய, குளிர் வலயத்தைச் சேர்ந்த கடல் ஓரத்தில் அதிகம் காணப்படுகின்றது.

2 தொடக்கம் 3 சென்ரிமீற்றர் நீளமான கொடிபோல் படரும் இனத்தைச் சேர்ந்த புல்லினம் பிரேசிலில் காணப்படுகின்றன. மேலும் வேறு ஒரு இனமான விலாங்குப் புற்கள் (**Ellgrass**) ஜப்பானிய கடல் பிரதேசத்திலும் காணப்படுகின்றது.

பவளப் பாறைகளை (**Coral reefs**) அகற்றப்படுவதன்மூலம், அவற்றில் மேல் படிவுகள் தோன்றவிடாது பாதுகாத்துக் கொள்கின்றது.

மேலும் அதன் வளர்ச்சிக்குத் தேவையான சத்துகளை அவற்றால் பெறமுடியாத நிலையும், மனிதனின் இயற்கைக்கெதிரான செயற்பாடுகளினால் கரைப்பிரதேசங்களை அசுத்தமாக்கலும், படகுகளின் பிரயாணங்களும் நிலத்தேவைக்காகக் கடற்கரைகளின் மண் நிரப்புகளும் இவற்றின் அழிவுக்குக் காரணமாக அமைகின்றன. இன்று உலகின் சில பிரதேசங்கள் இந்தப் புற்களின் பாதுகாப்பிற்காக ஒதுக்கப்பட்டுள்ளன. பல சிறிய மீன் இனங்கள் தமது வாழ்க்கை வட்டத்தின் முக்கிய பகுதிகளை இந்தப் புற்களுக்குள் கழிப்பதாக அறியப்பட்டுள்ளது.

கடல், ஆகாயம் ஆகிய பகுதிகளின் காபன் வட்டத்திலும் கடற்புற்கள் பங்காற்றுவதும் குறிப்பிடத்தக்கது.

# ரோபோவும் நோயிகளும்

"ரிசஷ்" எனப்படும் குரங்கு இனத்திற்கு - இயந்திர மனிதனின் கையின் அசைவுகளை தமது மூளையில் இருந்து வெளிப்படும் சமிக்கைகள் மூலம் கட்டுப்படுத்துவதற்கான பயிற்சியைக் கொடுத்துள்ளார்கள். இதன்மூலம் பாரிசவாதம போன்ற நோய்களினால் - கைகளுக்கும் மூளைகும் இடையே நரம்புகளின் செயற்ப்பாட்டை இழந்தவர்களுக்குச் செயற்கைக் கைகளைப் பொருத்துவதற்கு வழி பிறந்துள்ளதாக, வடக்குக் கரோலினாவிலுள்ள பல்கலைக்கழகத்தில் நடத்திய ஆய்வில் தெரியவந்துள்ளது.



இந்த ஆய்விற்கு இரு குரங்குகளைத் தேர்ந்தெடுத்து, அவற்றின் முளைக்குள் இலத்திரேட்டுக்களை மூளைக்குள் வைத்திருந்தார்கள். இலத்திரேட்டுக்கள் மின்சாரத்தை சமிக்கைகளாக மாற்றும் வல்லமை கொண்டுள்ளன. மேலும் குரங்குகளின் மூளையில் பொருத்தப்பட்ட சமிக்கைகளில் இருந்து இயந்திர மனிதனின் கை அசைவுகளை அவை கட்டுப்படுத்துவதை அவர்களால் அவதானிக்கமுடிந்தது. ஆனாலும், மனிதனின் மூளைக்குள் மிகவும் அவதானமாக இலத்திரேட்டுக்களைச் செலுத்தவேண்டும் எனவும், அவை சரியான இடத்தில் பொருத்தப்படவேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# திரை விமர்சனம்

வித்தியாசமான டைட்டில்- ஜெகன், ஜமுனா என்ற பெயர்களின் முதல் எழுத்தைத் தலைப்பாக வைத்திருக்கிறார் இயக்குநர் சரண். படத்தின் 2 ஆவது ரீல் முதல் கிளைமாக்ஸ் ஆரம்பித்துவிடுமளவிற்கு வேகமான கதை.

அமோகா மீது மாதவனுக்குப் பார்த்தவுடன் காதல் வந்துவிடுகின்றது. அதற்கு ஏற்படும் எதிர்ப்புக்களும், ஆதரவும்தான் திரைக்கதையாய் மலர்ந்துள்ளது. மாதவன் - ஹீரோ. நடிகைகள் அ...



இதைவிட, ரீமா செ... நடனம் ஆடிவிட்டுப் ... பாடல்களுக்குப் பரத்வா...யமைத்திருக்கின்றார். ...களில் சில எங்கோ ... பாடல்கள்போல் இருக்கி... இது பரத்வாஜின் 25 ... படம். இருந்தாலும், இ...டைய பாடல்களில் ஹிந்... பாடல்கள், ஆங்கில பாடல்களின் வாசனையும் வருகின்றன.

ஒளிப்பதிவு வெங்கடேஷ். பாடல்கள் வைரமுத்து. இந்தப் பாடல்களுடைய பெரும்பாலான காட்சிகள் கிரீஸ், ஏதென்ஸ் நகரங்களில் படமாக்கப்பட்டிருக்கின்றன.

## ஜே ஜே

முக்கோணக் காதல்கதை என்றாலும், பார்ப்பதற்கு ஒரு வித்தியாசமான கதையம்சத்தைத் தேர்ந்தெடுக்கின்றார் சரண். பூஜா பெங்களூர் நடிகை. அமோகா டெல்லி இறக்குமதி. இருந்தாலும் நடிப்பு பிரமாதம்.

ஜே ஜே வெற்றி பெறும்.

# கணினியும்

நாளுக்கு நாள் கணினி உலகில் புதிய புதிய கண்டுபிடிப்புக்கள் வந்து கொண்டிருக்கின்றன. கணினி உலகில் தற்போது வந்துள்ள ஒரு புதுவகையான மென்பொருள் - விண்வெளி ஆராய்ச்சிகளுக்கு உதவியாகவுள்ளது. கடந்தகாலங்களில் கணினிமூலம் செய்த விண்வெளி ஆராய்ச்சிகளை விட, இந்தமென் பொருள் மிகவும் பயனுடையதாகவுள்ளது.



இந்த மென்பொருள் சற்று வேகமாகத் தகவல்களைத் தருவதாகக் கூறப்படுகின்றது. தொலைக்காட்டிகள்கூட, கணினிமயமாக்கப்பட்டுள்ளன. மிகத்துல்லியமாக இந்த கணினி மென்பொருள் - தகவல்களைத் திரட்டித்தந்து கொண்டிருக்கின்றது. இதன் மூலம் அண்மையில் பயன்படுத்தப்பட்ட தொலைக்காட்டி ரெலஸ்கோப் இது அற்புதமாகத் தன்னுடைய பணியைச் செய்து கொண்டிருக்கின்றது. இதன் மூலம் அண்மையில் பயன்படுத்தப்பட்ட தொலைக்காட்டியினுடைய பெயர் - ஐக்கிய இராச்சியத்தின் இன்பராரெட் ரெலஸ்கோப். இது அற்புதமாகத் தன் பணிகளைச் செய்துகொண்டு வருகின்றது. உலகத்தின் வேகத்துக்கு ஏற்றவாறு கண்டுபிடிப்புக்களும் வேகமாக வந்துகொண்டிருக்கின்றன. ஆனால், கருவிகள் உதவி செய்தாலும், மனிதனுடைய மூளைதான் இந்தக் கணினி மென்பொருளைக் கண்டுபிடிக்க உதவுகின்றது. ஐக்கிய இராச்சியத்தைச் சேர்ந்த டொக்டர் அலன் கருத்துக் கூறுகையில்- இந்தக் கண்டுபிடிப்பு முழுமையானது, வேகமானது மற்றும் சிறப்பானது. அடுத்ததாக கையடக்கத் தொலைபேசி மூலம் விண்வெளியைப் பார்ப்பதற்குரிய ஏற்பாடுகளும் நடைபெற்று வருகின்றன என்கிறார்.

## விண்வெளியும்

# வாரம் ஒரு யோகாசனம்

## ஆஞ்சநேயராசனம்



முதல் நிலையாக நேராக நிற்கவேண்டும். வலதுகாலை முன்புறமாக நீட்டவேண்டும். இடது காலை பினபுறமாக அகட்டவேண்டும். வலது காலையும் இடதுகாலையும் பின்னும், முன்னும் மாற்றி மாற்றி செய்யவேண்டும். பின் தரையில் அப்படியே அமரவேண்டும். கால் தொடைகள், முழங்கால்கள், நரம்புகள் ஆகியவற்றில் சிறுவலி ஏற்படும். இரண்டு மூன்று நாட்களில் இந்த நோ குறைந்துவிடும். பயப்படத்தேவையில்லை. கடுமையான பயிற்சி, எடுத்த எடுப்பில் கால் பாதங்களை விரிக்கக்கூடாது - ஆபத்து ஏற்படும். இரண்டு கால்களையும் மாற்றி மாற்றி பயிற்சி செய்யவேண்டும். நாளடைவில் பூரணமாக இரண்டு கால்களும் விரித்து கொள்ளும். கால் தொடைகளின் மேல் இரண்டு கைகளும் இருக்கவேண்டும்.

## நன்மைகள்

கால் இரு பாதங்களும் அதிகமாக வலுவடையும். கால்களுக்கு அதிகமாக இரத்தம் போய்ச்சேரும். பெருத்த கால் - கனம் குறையும், கெண்டைக்கால் தசைப்பிடிப்பு நீங்கும். நாரி சம்பந்தமான எந்த நோயும் வராது. வந்தாலும் குணமாகும். பெண்களுக்கு மாதவிடாய் சம்பந்தமான எந்தப் பிரச்சினையும் இருக்காது. இருந்தாலும், சீர்செய்யும் பிரசவவலி குறையும். சுகப்பிரசவம் உண்டாகும். இடுப்பு அழகு பெறும். பரதநாட்டியம், பிறேக்டான்ஸ், கால்பந்து விளையாட்டு, ஓட்டம், நீச்சல், கராத்தே வீரர்கள் - வீராங்கனைகளுக்கு இது அதிக பலனைக் கொடுக்கும்.

*தருபவர் - மா.மகாநேசன்.*

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

சிந்தனைக்கு
*சிறுமையும் செல்லாத் துனியும் வறுமையும்*
*இல்லாயின் வெல்லும் படை.*
-திருக்குறள்.

## நமது நோக்கு

### சமாதான ஏற்பாடுகளை விஞ்சிய பாதுகாப்பு ஏற்பாடுகள்...

என்றுமில்லாத வகையில் சிறிலங்காவின் பாதுகாப்புக் குறித்து இப்போது, சர்வதேச நாடுகள் சிலவும் சிறிலங்கா அரசும் அதீத அக்கறை கொள்ளத் தொடங்கியுள்ளன.

இப்போது போர் நிறுத்தப்பட்டு சமாதானம் கடந்த ஓராண்டு காலத்திற்கு மேலாக கடைப்பிடிக்கப்பட்டு வருவதுடன், சிறிலங்கா அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் பலசுற்றுப் பேச்சுவார்த்தைகள் நடைபெற்று முடிந்து, இடைக் கால நிர்வாகக் கட்டமைப்பினை ஏற்படுத்துவது குறித்த நகர்வுகள், தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற நிலையில், சிறிலஙகாவின் பாதுகாப்புக் குறித்து அதிக அளவில் அரச தரப்பினராலும், சில வெளிநாட்டினராலும் அதீத கவன ஈர்ப்புடன் கவலைப்படுவது வியப்பாக இருக்கிறது.

ஒரு நாட்டின் பாதுகாப்புக் குறித்து அந்த நாடு அக்கறைப் படுவதென்பது இயல்பான விடயமே. எனினும் உள்நாட்டுப் போர் தீவிரமடைந்து பாரிய இழப்புக்களையும் தோல்விகளையும் பின்னடைவுகளையும் சந்தித்தவேளையில்கூட மேற்கொள்ளப் படாத பாதுகாப்புத் தொடர்பான செயற்பாடுகளை, சமாதான காலத்தில் என்றுமில்லாத அளவுக்கு தீவிரமாக செயற்படுத்த முனைவதுதான், சந்தேக உணர்வலைகளை எழுப்புவதாக உள்ளது.

சமாதான நடவடிக்கைகளுக்கு பின்னடைவோ, தடங்கலோ ஏற்பட்டால், மீண்டும் போர்வெடிக்கும் நிலை உருவாகும் என அரசு அர்த்தங்கொள்ளக்கூடும்.

எனவே, அதற்கான தயார் நிலையைப் படைத்தரப்பினர் ஏற்படுத்தக்கொள்வதற்கும், அவர்களை உற்சாகப்படுத்திக் கொள்வதற்கும், அரசு இவ்வாறு செய்யக்கூடும்.

ஆனாலும், இன்றைய சமகால, சமாதான நிலைப்பாடானது, பாதுகாப்புப் படையினர் என்று, தம்மை அழைத்துக்கொள்ளும் இராணுவத்தைப் பொறுத்தவரையில், அவர்களால் ஜீரணிக்க முடியாத ஒன்றாகவே உள்ளது.

வடக்கு - கிழக்கில் தமது கட்டுப்பட்டில் உள்ள பகுதிகளில், தங்களின் இராணுவத்தனமான ஆட்சியின், வலுவான ஆதிக்கம் சமாதானத்தின் காரணமாக சிதைவடைந்து போய்விட்டதாக, அவர்கள் நினைக்கின்றனர்.

இதேவேளை, சமாதான முயற்சிகளை சிலவேளை நேரடியாகவும், பலவேளைகளில் மறைமுக மூலோபாயங்களைக் கையாண்டு, எதிர்த்துவரும் ஜனாதிபதியே, முப்படைத் தளபதியாகவும் விளங்குவதுதான், இராணுவத்தரப்பு மனோநிலைக்கு உத்வேகம் அளிக்கும் பின்பலமாகவும் உள்ளது என்பதைக் கருத்தில்கொள்ளவேண்டும்.

பாதுகாப்புத் தொடர்பான பிரச்சினைகளில், இறுதி முடிவை எடுக்கும் அதிகாரம் ஜனாதிபதியின் கையிலேயே உள்ளதே, சமாதானச் சூழலுக்கேற்ப படைத்தரப்பை கட்டுப்படுத்தும் வலு, அரசுக்கு இல்லாமல் போனமைக்கு காரணமாகும்.

ஜனாதிபதியை முற்றாகப் புறக்கணித்து - படைத்தரப்பினர் தொடர்பான விடயங்களில் அரசால் எந்தவித நடவடிக் கையும் எடுக்கமுடியாததுடன், அவர்களைப் புறக்கணித்து அல்லது பகைத்துக்கொண்டும் அரசால் எதுவும் செய்யமுடியாது. சமாதானத்தை தக்கவைக்கவும், அது சாத்தியமற்றுப்போய், போர் ஏற்படும் சாத்தியம் ஏற்படுமேயானால், அதனை எதிர்கொள்ளவும், படைத்தரப்பின் ஆதரவின்றி அரசால் எதுவும் செய்யமுடியாது என்பதே யதார்த்தம்.

எனவே, படைத்தரப்பை கனம் பண்ணவேண்டிய அவசியம் அரசுக்கு உண்டு. இது படைத்தரப்பினரை மேலும் பலப்படுத்தும், மேம்படுத்தும் நடவடிக்கைக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டிய நிர்ப்பந்தத்தை அரசுக்கு ஏற்படுத்தியுள்ளது.

போர்நிறுத்தம் உருவாகி பேச்சுவார்த்தைகள் தொடங்கிய வேளையில் பாதுகாப்புச் செலவீனத்தைக் குறைப்பது குறித்தும், படையினரை ஐ.நா.பாதுகாப்பு படையில் பணியாற்றும் அனுபவம் குறித்தும் அரசு பீற்றிக்கொண்டது.

ஆனால், சில மாதங்களிலேயே எல்லாம் தலைகீழாகியது. அடுத்த மூன்று வருடங்களுக்கான பாதுகாப்புச் செலவீனத்தை ஒரே தடவையில் மதிப்பீடு செய்து, ஒதுக்க முனைந்ததும் இதே அரசுதான்.

அத்துடன் - அமெரிக்கா, பிரிட்டன், இந்தியா, சீனா என அனைத்து நாடுகளுடனும், பாதுகாப்புத் தொடர்பான வெவ்வேறு ஒப்பந்தங்களையும் அரசு மேற்கொண்டதுடன் இராணுவ, ஆயுத மற்றும் ஏனைய உபகரணக் கொள்வனவுகள் தொடர்பான, உடன்படிக்கைகளை மேற்கொண்டமையானது, அமைதித் தீர்வின் மீதான அரசின் விசுவாசத்தை கேள்விக்குறிக்கும் உள்ளாக்கியுள்ளது.

"அண்மையில் மீண்டும் போர் ஏற்பட நேர்ந்தால் - சர்வதேச சமூகம் அரசுக்கு உதவி செய்யும" என ரணில் ஒரு கூட்டத்தில் தென்பகுதி மக்களிடையே பகிரங்கமாகக் கூறியமையானது, ரணிலின் சமாதான பாத்திரத்தில் உள்ளதை வெளிக்காட்டியுள்ளது.

அவ்வப்போது வரும் பல்வேறு நாடுகளின் இராணுவ மற்றும் அரச அதிகாரிகள், பாதுகாப்பு நிலவரங்களை ஆராய்கிறார்களாம்!

இந்த ஆய்வு எதற்காக என ஆராய்ந்தால், அதன் பின்னணியில் இருக்கும் அவர்களின் உள்நோக்கங்களை அறிந்துகொள்ளமுடியும்.

தற்போது, பாதுகாப்பு ஒத்துழைப்புக் குறித்து இந்தியாவுடன் பேச, ரணில் இந்தியா சென்றுள்ளார்.

ஒன்றைக் கவனிக்கவேண்டும். விடுதலைப் புலிகளைத் தடைசெய்துள்ள நாடுகளுடன் தான், அரசு பாதுகாப்பு உடன்படிக்கைகளை மேற்கொள்கின்றது என்பதே அதுவாகும்.

இன்னொரு முக்கிய விடயத்தையும் கூறவேண்டும்.

சமாதான நகர்வுகளில் ஒத்துழைக்கும் நாடுகளைப் புறக்கணிக்கும் அல்லது எதிர்க்கும் ஜனாதிபதியும், எதிர்க்கட்சிகளும் கூட இந்தப் பாதுகாப்பு மற்றும் இராணுவ உடன்படிக்கைகளுடன் இணங்கியே போகின்றன என்பதே அதுவாகும்.

## நாடும் நடப்பும்



# ஐக்கிய இலங்கைக்குள் வாழ்வதா; தமிழீழம் உருவாக இடமளிப்பதா?

## சிங்களவர் தீர்மானிக்கும் காலம் இது - ராஜித சேனாரத்ன

ஒன்றுபட்ட ஐக்கிய இலங்கைக்குள் வாழ்வதா? தமிழீழம் உருவாவதற்கு இடம் கொடுப்பதா? என்பது குறித்து, சிங்கள மக்கள் தீர்மானிக்க வேண்டியகாலம் வந்துவிட்டது என்று, காணி அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

நாட்டிற்குப் பொருந்தக்கூடிய சமஷ்டி அரசியல் அமைப்பு முறை தொடர்பாக, கொழும்பிலுள்ள இலங்கை மன்றக் கல்லூரியில் இடம்பெற்ற கருத்தரங்கில் உரையாற்றும்போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

சுதந்திர இலங்கையின் முதலாவது பிரதமரான டி.எஸ் சேனநாயக்க, வடக்கு - கிழக்கு பகுதிகளில் குடியேற்றத்தினை ஆரம்பித்து, சிங்கள மக்களை அங்கு குடியேற்றினார். இன்னொரு காணி அமைச்சர் வந்து, அங்கு சிங்கள குடியேற்றங்களைச் செய்யமாட்டார் என்பதற்கு, என்ன உத்தரவாதம் என்று - தமிழ் மக்கள் கேட்கின்றார்கள்.

சிங்களக் குடியேற்றங்கள்மூலம், தமது மண் பறிபோவதாகத் தமிழர்கள் அஞ்சுகிறார்கள். தமது பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படுகின்றது எனவும் அவர்கள் பயப்படுகிறார்கள். எனவே - காணி உரிமை, பாதுகாப்பு உத்தரவாதங்கள் தொடர்பாக அவர்கள் பேசுகின்றார்கள். இந்தநிலையில், தமிழர்களின் இந்த அச்சத்தை இடைக்கால நிர்வாக அமைப்பின் மூலமாகவோ, வேறு எந்த வழியிலோ போக்க வேண்டிய கடப்பாடு - சிங்கள மக்களுக்கு உண்டு என்றும் அமைச்சர் வலியுறுத்தினார்.

சமஷ்டி அரசியலமைப்புமுறை - பல இனக் குழுக்கள் வாழும் இந்த நாட்டுக்கு மிகப்பொருத்தமானது. அதுவே இனப்பிரச்சனைத் தீர்வுக்கும் சாதகமாகக் கூடியது என்றும் அமைச்சர் குறிப்பிட்டார். இன நெருக்கடிக்குத் தீர்வுகாணும் நடவடிக்கைகளில் அரசாங்கம் ஆலோசித்துக்கொண்டிருக்கும் சூழ்நிலையில், எதிர்க்கட்சிகளின் பிரசாரங்கள் நாட்டின் தேசிய நலனுக்குக் கேடு விளைவிக்கின்றது என்றும் அவர் குற்றஞ் சாட்டினார். முரண்பாடான சிந்தனைகளிலிருந்து விடுபட்டு - வேற்றுமையிலும் ஒற்றுமையாக வாழும் யதார்த்தத்தை ஏற்றுக் கொள்ளக்கூடிய விடயங்களில், நாம் கவனம் செலுத்த வேண்டும் எனவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

பிரித்தானியர் - இலங்கையை விட்டுச்சென்றபோதும், இலங்கைக்குச் சுதந்திரம் வழங்கியபோதும், ஒற்றையாட்சியுடன்தான் அதனைக் கையளித்தனர். அதற்குப் பிற்பட்ட காலங்களில் அதிகாரப் பரவலாக்கலினை - டட்லி சேனநாயக்க, ஜே.ஆர்.ஜெயவர்த்தன ஆகியோர் மேற்கொண்டனர். எனினும், அது பலனளிக்கவில்லை. அது உரியமுறையிலான அதிகாரப் பகிர்வு அல்ல என்றும், தமிழ் மக்கள் எதிர்த்தனர். அவ்வாறு அரைகுறையாக அன்று ஏற்பாடு செய்யப்பட்ட அதிகாரப் பகிர்வு முறைகளைக்கூட, அப்போது தென்பகுதியிலுள்ள அரசியல் தலைமைகள் எதிர்த்தனர்.

டட்லி - செல்வா ஒப்பந்தத்தை அன்று சிறிமாவோ பண்டாரநாயக்க கடுமையாக எதிர்த்தார், விமர்சித்தார். இதுதான் இன்றும் நடக்கிறது. என்ன, ஏது என்று அறியாமல், எல்லாவற்றையும் எதிர்க்கிறார்கள். சிங்கள மக்களை தவறான பாதைக்குக் கொண்டுசெல்கின்றார்கள். பூரணத்துவமான சமஷ்டி அரசியல் அமைப்புமுறை, இந்த நாட்டிற்குப் பொருந்தக்கூடியது. இது குறித்து விழிப்புணர்வுகளை மக்களுக்கு ஏற்படுத்தவேண்டும். இனவுறவின் புரிந்துணர்விற்கான இறுதிக் கட்டம் இது என்பதையும் உணரத்தவறிவிடக்கூடாது என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

## 80 தேசிய பாடசாலைகள் மேலும் உருவாக்கப்படும்!

மாகாணக் கல்வி அமைச்சுக்களின் கீழுள்ள - 80 பாடசாலைகளைத் தேசிய பாடசாலைகளாகத் தரம் உயர்த்துவதற்கு, கல்வி அமைச்சு நடவடிக்கை எடுத்துவருகிறது.

இதற்கான நடவடிக்கைகளில் கல்வி அமைச்சு ஈடுபட்டு வருவதாக, கல்வி அமைச்சின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

தெரிவுசெய்யப்பட்ட இந்தப் பாடசாலைகளில் சில தரமுயர்த்தப்படுவதற்குப் போதிய தகைமையற்றிருப்பதால், தேசிய பாடசாலையாகத் தரமுயர்த்தும் திட்டத்திலிருந்து அவை நீக்கப்படலாம் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

## சாரதி அனுமதிக்கான பரீட்சை 29 ஆம் திகதி நடைபெறவுள்ளது

மோட்டார் போக்குவரத்து அனுமதிப்பத்திரம் பெறுவதற்கு, யாழ். போக்குவரத்துத் திணைக்கள அலுவலகத்தில் விண்ணப்பித்தோருக்கான எழுத்து மற்றும் செய்முறைப் பரீட்சைகள் எதிர்வரும் 29 ஆம் திகதி நடைபெறவுள்ளன.

இது குறித்து விண்ணப்பதாரிகளுக்கான கடிதங்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகவும், கடிதம் கிடைக்காத விண்ணப்பதாரிகள் - யாழ்.மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்துடன் உடனடியாகத் தொடர்புகொள்ளுமாறும், யாழ். மாவட்ட உதவி மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் வி.பத்மநாதன் கேட்டுள்ளார். (43)

### முஸ்லிம்களை தனித்தரப்பாக

# அங்கீகரிக்கக் கோரும் பிரேரணை நாடாளுமன்றத்தில் விவாதத்திற்கு!

அரசாங்கத்திற்கும், விடுதலைப்புலிகள் இயக்கத்திற்கும் இடையே நடைபெறும் சமாதானப் பேச்சுவார்த்தைகளில், முஸ்லிம்களைத் தனித்தரப்பாகப் பங்குபற்றுவதற்கு இடமளிக்கக்கோரும் நாடாளுமன்ற ஒத்திவைப்புப் பிரேரணை இன்று நாடாளுமன்றத்தில் கொண்டுவரப்படவுள்ளது.

இந்தப் பிரேரணைக்குத் தமிழ்க் கட்சிகளதும், மக்கள் விடுதலை முன்னணியினதும் ஆதரவைத் திரட்டும் பணியில் வடக்கு - கிழக்கு முஸ்லிம் எம்.பிக்கள் ஒன்றியம் ஈடுபட்டுள்ளது.

இந்தப் பிரேரணை தொடர்பாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஈழமக்கள் ஜனநாயகக்கட்சி, புளொட், ஜே.வி.பி. ஆகிய கட்சிகளைத் தனித்தனியாகச் சந்தித்துக் கலந்துரையாட இருப்பதாக, ஒன்றியத்தின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

### காலத்தை வென்ற கலைஞன் நினைவாக...

# 'தாளக்காவடி' தந்த மாகலைஞன் கலைப்பேரரசு ஏ.ரி.பொன்னுத்துரை

நாடக உலகில் நடிகராக தயாரிப்பாளராக, எழுத்தாளராக, திறனாய்வாளராக, இவற்றிக்கெல்லாம் மேலாக கலாரசிகராக அரங்கப்பணியில் பவளவிழா கண்ட நாடறிந்த கலைஞர், இன்று எம்முடன் இல்லை. கலை அரசினால், கலைப் பேரரசு எனப் போற்றப்பட்ட கலை உலகநாயகன் என்று எம் கலையுடன் இல்லை.

தெல்லிப்பளையின் சிற்றூர்க



ளில் ஒன்றான கலை விளையும் கவிப் பெரும் பூமியான குரும்பசிட்டி பெற்றெடுத்த தூய கலைப் பண்பின் வடிவமாக 15.05.1928 ஆண்டிலே கலைக்கொரு மகனாக ஏ.ரி.பொன்னுத்துரை பிறந்தார். இவர் தனது ஆரம்பக் கல்வியை குப்பிளான் பொன் பரமானந்த வித்தியாலயத்திலும், தொடர்ந்து பரமேஸ்வராக் கல்லூரியிலும் மேல் நிலைக் கல்வியினை, சென்னை கிறிஸ்தவக் கல்லூரியில் கற்று கல்வியில் தனக்கென ஒரு இடத்தை தக்கவைத்துக்கொண்டார். இதன் பயனாய் நடேஸ்வராக் கல்லூரி, கண்டி இந்து சிரேஷ்ட வித்தியாலயம் என்பவற்றில் ஆசிரியராகவும், குப்பிளான் விக்னேஸ்வரா மகாவித்தியாலயத்தில் அதிபராகவும் கல்விப் பணியினை கருணையுடன் மேற்கொண்டார்.

பரமேஸ்வராக் கல்லூரியில் மாணவனாக இருந்துபோது, 1950 ஆம் ஆண்டு பிரான்ஸ் நாட்டு 'மோலியரின லோபி' நாடகத்தில் உலோபியாக தனது கலை உலக பிரவேசத்தை ஆரம்பித்த ஏ.ரி.பொன்னுத்துரை ஈழத்துத் தமிழ் நாடக வளர்ச்சிக்கு பெரும் பங்களிப்புச் செய்து கொண்டுள்ளார். ஈழத்து வழிவந்த மரபின் தலைசிறந்த நாடகக் கலைஞர்களாகிய கலையரசு க.சொர்ணலிங்கம், கலாஜோதி செ. சண்முகநாதன் (சனா) போன்றோரின் அரவணைப்பில் வளர்ந்த ஏ.ரி.பொன்னுத்துரை பல பாத்திரங்களில் நடித்துள்ளார். கதாநாயகனாக, வில்லனாக, நகைச்சுவை நடிகனாக, குணசித்திர நடிகனாக, மன்னனாக பல மேடைகளில் அவரது நடிப்புத் திறன் காரணமாக, பல்வேறு கோணங்களில் காட்சி தந்தார். இறுதியாக யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட மாணவர்களின் பாரம்பரிய கலைகளின் பகிர்வு 2002 ஆம் ஆண்டு கைலாசபதி கலையரங்கில் இடம்பெற்றது. எமது பாரம்பரிய கலைகளில் ஒன்றான - தாளக் காவடியை, தனது இரு மாணவிகள் மூலம் வெளிப்படுத்துவதற்கு நட்டுவாங்கம் செய்து, கலை மீது தான்கொண்ட பற்றினை, இயலாத காலத்திலும், இனிமையாக வெளிப்படுத்தியது கலைப் பேரரசின் கடைசிப் படைப்பு.

இளம் வயதிலிருந்து இன்றுவரை, நாடகமே தனது உயிர்த்துடிப்பு என்ற வகையில் நடமாடி, ஈடிணையற்ற ஏராளமான நாடகங்களை நெறிப்படுத்தி, அரங்கேற்றித் தானும் பங்குபற்றி தனக்கென- நாடக உலகில் அழியாத முத்திரையினை பதித்துச் சென்றுள்ளார்.

ஏ.ரி.பொன்னுத்துரை, தனது கலை உலக வாழ்வில் குரும்பசிட்டி சன்மார்க்க சபை, யாழ்.இலக்கிய வட்டம், மாவை முத்தமிழ் மன்றம், யாழ். நாடக அரங்கக் கல்லூரி, தெல்லிப்பளை - கலை, இலக்கிய தளம் என்பவற்றில் இணைந்து - கலை, கலாசார பண்பு என்பவற்றை முன்னேற்றுவதற்காக, இறுதிவரை உழைத்தவர். இவற்றுடன் - பட்டிமன்றங்கள், சமய சொற்பொழிவுகளை நிகழ்த்துவது, சமூகப் பணிகளிலும் முன்னின்று உழைத்தவர்தான் ஏ.ரி.பொன்னுத்துரை

சைவப் புலவர் சு.செல்லத்துரையின் நாடக வாழ்க்கையை பின்வருமாறு கவியாக்கினார்.

ஈழத்து நாடக
வளர்ச்சிக் காலத்தில்
இடையூடின்று
ஆடிய நாயகன்
அரங்கக் கலையில்
ஐம்பது ஆண்டுகள்
அயராது உழைத்த
அருங்கலைக் காவலன்
ஆட்டக் கூத்து
களத்தில் தொடங்கி
நவீன அரங்கில்
நவயுகம் படைத்தவர்
கலையரசாலே
கலைப்பேரரசென
கலைமுடி சூடிய
கவின்கலை செம்மல்
பொன்விழா கண்டு
புகழ்மிகக் கொண்டவர்
பவளவிழாக் கண்டு
பல்லாண்டு வாழ்க

இவ்வாறு கலைஞனின் கலைப் பயணத்தில் விபரிக்கிறார் புலவர். கலைப் பேரரசு உருவாக்கிய நாடகங்களில் நாடக நூல்கள் பத்து. அவற்றில் - தாளக்காவடி நிஜங்களின் தரிசனம், கூப்பிய கரங்கள் நாடகம், மயில் பக்தி வெள்ளம் இவற்றைக் முக்கியமாக குறிப்பிடலாம்.

இயலிசை நாடகம், சிற்பம், ஓவியம் சார்ந்த கலை நிகழ்வுகள் கருத்துக்களை நடத்துதல் - நூல்களை அறிமுகம் செய்தல், ஆய்வு செய்தல், கலைஞர்களை அழைத்து செவ்வி காணலும், கௌரவித்தலும், கலை உறுப்பினர்களின் கலை இலக்கிய ஆற்றலை மேம்படுத்தல், சாதனை புரியும்போது கௌரவித்தல், பிரதேச கலை இலக்கிய வளங்களை பேணலும், இளம் தலைமுறையினரை கலை இலக்கியத் துறையில் வளப்படுத்தி, வளப்படுத்தல் போன்ற பல செயல் பாடுகளை நோக்கமாகக் கொண்டு இயங்கி வந்த, இயங்கி வருகின்ற கலைக் கழகங்கள், சங்கங்களிற்கு உயிர் மூச்சாக உழைத்தவுடன் பொறுப்புள்ள பல பதவிகளில் வகித்தவுடன், தனது சொந்தப் பணத்தையே பல வழிகளில் ஈடுபடுத்தி - இவ் அமைப்புக்கள் நிறைவு பெறுவதனை பார்த்து மகிழ்ந்தவர்.

ஏ.ரி.பொன்னுத்துரை, அவர்களின் படைப்புக்களில் குறிப்பிடும் படியான சில நாடகங்கள் - பல பரிசில்களைப் பெற்றதுடன், இலங்கையின் பல பாகங்களிலும் பல தடவைகள் மேடையேற்றப்பட்டன. இவற்றிலே ஆராமுது அசடா - 21 தடைகளும், பாசக்குரல் 8 தடவைகள் போன்றவற்றை குறிப்பிடுவதுடன், இவரது வானொலிப் படைப்பாகவும். மேடை நாடகமாகவும், வலம் வந்த தாளக் காவடி பற்றி அதன் கருப் பொருள் மிக உயர்வானது. தான் பாதிக்கப்பட்டபோது, தன் கடமைகளைச் செய்ய மறக்காத உயர்பாத்திரமாக அண்ணாவியார் அமைகிறார். இந் நாடகத்தில் மண்வாசனைச் சொற்களுடன் ஆட்டங்களும், பாட்டுக்களும், நாடகத்திற்கு வலிமைசேர்ந்தன. இவற்றிக்கெல்லாம் மேலாக, சற்று உள்ளே சென்று பார்த்தால், நாடக உலகில் மங்காப்புகழ் பெற்றவர்களின் கூட்டு முயற்சி என்பதுடன் வி.வி.வைரமுத்து, கே.கணேசபிள்ளை, வித்துவான் சோதிநாதன் என பிரபலங்களின் கூட்டணியே இவ் வெற்றிக்கு பலம் சேர்ந்தது.

ஏ.ரி.பொன்னுத்துரை, தனது அனுபவக் குறிப்பில் தான் பெருமையடைவதை மிகப் பெருமையாக குறிப்பிட்டுள்ளார். அதில் நாடக நூலகள் ஏராளம் படித்ததுண்டு.

நாடகங்கள் 'எழுதி பிரசுரித்ததுமுண்டு. கருதரங்குகளில் கட்டுரைகள் சமர்ப்பித்ததுமுண்டு. கலைக் கழகப் பரிசு பெற்று மகிழ்ந்ததும் நாடகத் தயாரிப்பாளராய் மிளிர்ந்ததும் - ஆனால், இவற்றுக்காக யான் பெருமை அடைவதில்லை. இலக்கியம் என்ற நிலையில் மட்டுமன்றி மேடை நிலையில் வளர்கிறேன். பைத்தியமாய் நின்று உழைக்கிறேனே, அதனால் - நாடக இலக்கியம், நாடக மேடை இவை இரண்டிலும் கணிசமான உரிமையை முறையாகப் பெற்றேனே. இதனாலேயே தான் பெருமை அடைகின்றேன் என ஒரு முழுமையான முதிர்ந்த கலைகள் என்ற ரீதியில் அனுபவவாயிலாகப் பெருமையடைகிறார்.

இன்று கண்டகண்ட இடங்களிலும் - தகுதியற்றவர்களாலும், போலிக்கலைஞர்களாலும் - தமக்கு இலகுவான வகையில் நாடகம் என ஒருவகை கூட்டம் நடத்தப்படுகின்றது. நாடகத்துறைக்கே தன்னை அர்ப்பணித்து தொண்டாற்றி வந்த நடிப்புலக மாமேதை, நாடகப் பேராசானான ஏ.ரி.பொன்னுத்துரை, இவர் காட்டிய வழியில் நாம் வீறுநடை போடுவோமானால், நாம் தெய்வீகக் கலைகளாகிய எமது பரம்பரையான கலைப் பொக்கிசங்களை உரிய முறையில் பாதுகாக்கலாம். சிறப்பான முறையில் மேடைக் கடைசிகளாக்கலாம் என்பது சிறிதும் ஐயமில்லை.

இந்த நாடக்கலைக்கு அபயமளிக்கக்கூடிய ஏ.ரி.பொன்னுத்துரை, போன்றவர்கள் உருவாகியதுபோல் ஏனையோரும் முன்வரவேண்டும்.

இவரது புகழ் இலங்கையில் மட்டுமன்றி, இந்தியாவில் மனம் வீசியது என்றால் மிகையாகாது. சென்னை கிறிஸ்தவக் கல்லூரியில் மேல் நிலைக்கல்வி கற்ற காலத்தில் பல்வேறு நாடகங்களில் வெவ்வேறு குணச்சித்திரப் பாத்திரங்களை ஏற்று நடித்து, தமிழ் நாட்டின் நடிகர்களின் பாராட்டைப் பெற்றதுடன், தனது கல்லூரிக்கும் தாய்நாட்டிற்கும் பெருமை சேர்த்தவர்.

நாடகத்துறையில் பல்துறை விற்பனராக விளங்கியவர். இவரை நாடகங்களின் ஆசிரியர் என்று நோக்குவோமானால், மக்களை நற்போக்குப் பாதையில் வழிநடத்திச் சென்றுள்ளனர் என்பதை இறுதிப் பரிசு, கூப்பிய கரங்கள், பக்தி வெள்ளம், 'நாம் ஒன்று நினைக்க என்ற ஓரங்க நாடகம்' இவை ஏ.ரி.பொன்னுத்துரை, கலைப் பயணத்திற்குத் தக்க சான்றாக அமைகிறது.

நாடகக் கலைக்கு ஓர் அணிகலனாக விளங்கிய ஏ.ரி.பொன்னுத்துரை, கலைத்துறையில் பண்பு சான்ற பணியும், ஆழமான அறிவும், தீர்க்கதரிசனமான பார்வையும் கொண்ட இவர், தனது இறுதிக் காலத்தில் நோயுற்றிருந்த போதிலும், கலைப்பணியை கனிவுடன் சிரமேற்று, கலை நடை பயின்ற நடிப்புலகின் நாயகன்.

கலைப்பேரரசு ஏ.ரி.பொன்னுத்துரை, நாடக மங்கையில் தணியாத காதல் கொண்டு, நாடக உலகமே தன் வாழ்வு என வாழ்ந்தவர். பல இடப்பெயர்வுகள், இன விரோதங்கள், பொறாமை காய்ச்சல்கள் எனச் சற்றுத் தளர்ந்தாலும், மறுகணமே நின்று நிதானித்து - நேரிய வழியில் கலைப் பயணத்தைத் தொடரத்தக்க அரும்பேறு பெற்றவர்.

நாடகக்கலையில் தனக்கென தனிவழி அமைத்துச் செயற்பட்டு வந்த ஏ.ரி.பொன்னுத்துரை - பல விருதுகளையும், பாராட்டுக்களையும் பெற்றவர். இவற்றுடன் - 1999 ஆம் ஆண்டில் கலாபூசண விருதையும் பெற்ற கலைப்பேரரசு - காட்டிய பாதையில் கலைப் பயணத்தைத் தொடர நாம் ஒவ்வொருவரும் இதய சுத்தியுடன், தூயகலையைப் பயின்று அதனை வளர்க்கவேண்டும்.

**காவலூர் விஜேந்திரன்**

---



செய்திக் கட்டுரை

# மக்கள் குடியிருப்புகளில் படையினர் அட்டகாசம்

புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு சமாதான சூழல் ஏற்பட்டதையடுத்து இடம்பெயர்ந்த மக்கள் பலர் தமது சொந்த இடங்களில் மீளக் குடியமர்ந்துவருகின்றனர்.

தென்மராட்சிப் பகுதியிலும், 2000 ஆம் ஆண்டு இடம்பெற்ற யுத்தத்தின்போது இடம்பெயர்ந்த பல்லாயிரக்கணக்கான மக்கள் தமது சொந்த இடங்களில் மீளக் குடியமர்ந்து வருகின்றனர். சமாதான சூழலில் படையினரால் தங்களுக்கு எவ்வித இடையூறுகளும் ஏற்படாதென, யாழ். குடாநாட்டு மக்கள் நிம்மதிப் பெருமூச்சு விட்டனர். தென்மராட்சிப் பிரதேச மக்களும், அந்த நம்பிக்கையுடன் மீள்குடியமர்ந்தனர்.

எனினும், தென்மராட்சிப் பிரதேச மக்களின் எதிர்பார்ப்பும், நம்பிக்கையும் சிதறடிக்கப்பட்டுக் கொண்டிருப்பது யாருக்குமே தெரியாது.

ஆம்!

தென்மராட்சிப் பிரதேசத்தில் குறிப்பாக நுணாவில், கைதடி, கச்சாய், கிளாலி உள்ளிட்ட மக்கள் செறிவு குறைந்த குடியிருப்புக்களுள் இரவு வேளையில் மதுபோதையில் படையினர் உட்புகுந்து, தமது கைவரிசையினைக் காட்டுகின்றனர். இரவுவேளையில் நிறை மதுபோதையில் வீடுகளுக்கள் உட்புகுந்து இராணுவத்தினர் அங்கிருக்கும் பெண்களை பாலியல் பலாத்காரத்திற்கு உட்படுத்த முயற்சிப்பதும், வீடுகளுக்குள் உள்ள பெறுமதிவாய்ந்த பொருட்களை திருடுவது தொடர்கதையாக வருகின்றது.

மக்கள் இதனை எதிர்க்க முற்படும் வேளை துப்பாக்கியை காட்டி தம்மை எதிர்த்தால் சுட்டுவிடுவோம் என அறைகுறை தமிழில் பயமுறுத்தி வருகின்றனர். இதனால், மக்கள் வெளியில் செல்ல பயந்து தினமும் துன்பப்படுகின்றனர்.

பகல் வேளைகளில் குறித்த சனநடமாட்டம் குறைந்த இடங்களிலுள்ள வீடுகளை உன்னிப்பாக அவதானித்துவிட்டு, படையினர் இரவு வேளையில் உட்புகுவதாக இப் பகுதியில் வசிக்கும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை, சில வீடுகளில் மக்கள் உறங்கிக்கொண்டிருக்கும் வேளைகளில் - வீட்டு யன்னல்களை உடைக்கும் சத்தம், கோழிக்கூடுகளில் கோழிகள் கத்தும் சத்தம் கேட்டு, மக்கள் கூக்குரல் இடும்போது, சப்பாத்துக்களுடன் ஓடும் சத்தம் கேட்பதாகவும், அதிகாலையில் வீட்டு முற்றத்தில் புடையினர் பலர் சப்பாத்துக்களுடன் உலாவிய அடையாளம் காணப்படுவதாகவும், இப்பகுதிகளை சேர்ந்த மக்கள் தெரிவிக்கின்றனர்.

இந்தச் சமாதானச் சூழலிலும், இரவுவேளைகளில் வீட்டுக்கு வெளியே நடமாடவோ, நிம்மதியாக நித்திரை செய்யவோ - தங்களால் முடியவில்லை என இவர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இராணுவத்தினர் மதுபோதையில் இரவு வேளைகளில், வீட்டுக்குள் உட்புகுந்து பெண்களுடன் சேஷ்டை புரியும்போது, வீட்டுக்காரர் எதிர்த்தால், படையினர் அவர்களுடன் கைகலப்பில் ஈடுபடுவதுடன், துப்பாக்கிகளை காட்டி மிரட்டியும் வருவதால் மக்கள் அச்சத்தில் இரவு வேளையில் நண்பர்கள் உறவினர்களின் வீடுகளுக்குச் சென்று தங்குகின்றனர்.

சில வீடுகளில் தொலைக்காட்சி, வானொலி போன்ற விலை உயர்ந்த பொருட்களை படையினர் திருடிச் சென்றுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மேலும், தென்மராட்சிப் பிரதேசத்தில் படையினர், வீதிகளில் - இரவு வேளையில் துவிச்சக்கரவண்டியில் நடந்தும் பயணிக்கும் மக்களின் முகத்துக்கு டோச் லைட் ஒளி பாய்ச்சி மக்களின் பயணத்திற்கு இடையூறு விளைவித்து வருகின்றனர்.

இதனால், இராணுவக் காவலரண்கள் முகாம்களை அண்மித்த வீடுகளில் வதியும் மக்கள் சிலர் படையினரின் அட்டகாசத்தால், வேறு இடங்களில் வசிக்கச் செல்லும் சம்பவங்களும் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன.

இந்தச் சமாதான சூழலில் படையினரின் இந்த அட்டகாசம், மக்கள் மத்தியில் கடும் விசனத்தை ஏற்படுத்தியுள்ளது.

இரவு வேளையில், இந்த அட்டூழியங்கள் நடைபெறுவதாலும், படையினர் தமது அடாவடித்தனங்களை வெளியே யாருக்கும் சொன்னால் சுட்டுவிடுவோம் என மிரட்டி வருவதால், மக்கள் தயக்கம் காட்டி வருகின்றனர். எனவே, படையினரின் இந்த அடாவடித்தனங்களை அடக்க, சம்பந்தப்பட்ட தரப்பினர் முன்வரவேண்டும். மேலும், இப்பகுதிகளில் உள்ள முகாம் பொறுப்பதிகாரிகளும் படையினரின் இந்தச் செயலுக்கு உடந்தையாக உள்ளதாகவும், தெரிவிக்கப்படுகிறது.

வேலியே பயிரை மேயும்போது, பொதுமக்களால். என்ன செய்ய முடியும். ஒரு முகாம் பொறுப்பதிகாரி தனக்குரிய தலைமைப் பொறுப்புடன் நடந்து கொள்வாரானால், இராணுவத்தினர் 'இந்த அட்டூழியங்களில் ஈடுபடவிடாது, தடுத்து நின்று தட்டிக் கேட்கலாம்.

இராணுவத்தினரைக் கண்டிப்பான உத்தரவுடன் முகாமைவிட்டு வெளியில் செல்ல அனுமதிக்க வேண்டும். முகாமைவிட்டு அடிக்கடி வெளியேற அனுமதிக்க முடியாவிடின், இராணுவமும் தங்களது படை அதிகாரிகளுக்கு பயந்து கீழ்ப்படிந்து நடப்பார்கள்.

ஆனால், எவ்வித கட்டுப்பாடுகளும் இன்றி திரிவதாலேயே படையினர் இந்தச் செயற்பாடுகளில் ஈடுபடுகின்றனர். படையினரின் இந்த அடாவடித்தனங்களை சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு கூற, மக்கள் தயக்கம் காட்டி வருகின்றனர். தமது உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டு விடும் என்ற பயத்தில் பின் நிற்கின் றனர்.

எனவே, மக்கள் படும் துயரை கருத்தில் கொண்டு - சம்பந்தப்பட்ட தரப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். கண்டுங்காணாமல் மௌனமாக இருந்தால், மக்களின் அவல வாழ்வு தொடர்கதையாக இருக்கும்.

மேலும், மக்களும் யாருக்கும், அஞ்சாது படையினரின் அட்டூழியங்களை சம்பந்தப்பட்ட தரப்பிற்கு எடுத்துக் கூற முற்படவேண்டும்.

**ந.கஜமுகன்**



லண்டனில், கிரேன் ஒன்றில் நாற்பத்திநான்கு நாட்கள் தண்ணீரை மாத்திரம் குடித்து சாதனை நிலைநாட்டிய டேவிட் பிளேனி என்ற நபர் கண்ணாடிக் கூண்டினூடாக வெளியே பார்வையிடும் காட்சி.

# காஸாவில் இஸ்ரேலியப் படை தாக்குதல்; இருவர் உயிரிழப்பு, 6 பேர் காயம்!

காஸாப் பகுதியில் இஸ்ரேலியப் படைகள் நடத்திய இருவேறு தாக்குதல்களில் இரண்டு பேர் உயிரிழந்தனர். இரு சிறுவர்கள் உட்பட ஆறு பேர் காயமடைந்தனர்.

பலஸ்தீனப் போராளிகளின் தலைவர் அப்துல்லா ஷாமியின் இருப்பிடம் எனக் கருதப்படும் கட்டடம் ஒன்றின் மீது இஸ்ரேல் குண்டுவீச்சு விமானங்கள் நடத்திய தாக்குதலில் அவர் உயிர்தப்பியதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

எனினும், இரண்டு சிறுவர்கள் உட்பட ஆறு பேர் இந்தத் தாக்குதலில் காயமடைந்தனர் என்று மீட்புப் பணியாளர்கள் தெரிவித்தனர்.

சாம் ஏவுகணைகளையும் வேறு பல ஆயுதங்களையும் கமாஸ் போராளிகள் தயாரிக்கும் இடமெனக் கருதியே தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாக ரொய்ட்டர் செய்திச் சேவை தெரிவித்துள்ளது.

மேற்குக்கரையில் 3 இஸ்ரேலியர்கள் கொல்லப்பட்ட தாக்குதலுக்கு அல் அகுசா தியாகிகள் என்ற அமைப்பு உரிமை கோரியதன் பின்னரே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இஸ்ரேலியப் படையினர் பலஸ்தீனப் போராளிகளுக்கு எதிரான தாக்குதல்களை ஆரம்பித்ததை அடுத்து அவர்கள் மறைவிடங்களிலேயே வாழ்ந்துவருகின்றனர்.

இந்தச் சம்பவம் நடைபெற்று 3 மணித்தியாலத்தின் பின்னர் நடைபெற்ற வேறொரு உலங்குவானூர்தித் தாக்குதலில் ட்ரக் ஒன்று தீப்பற்றிக் கொண்டதாகவும் அதில் பயணம் செய்த இருவர் கொல்லப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.



உயிரிழந்த இருவரும் தமது அமைப்பைச் சேர்ந்தவர்கள் என ஹமாஸ் அமைப்பு அறிவித்துள்ளதாக பி.பி.ஸி. தெரிவித்தது.

# சமாதானப் பேச்சுக்கு சமுகமளித்திருந்த செல்வந்த வர்த்தகர் சுட்டுக் கொலை!

## சோமாலியா காட்டுப் பகுதியில் சம்பவம்



(மொகடீஸ்)

சோமாலியாவில், சமாதானப் பேச்சு வார்த்தைக்காக சமுகமளித்திருந்த கென்யாவைச் சேர்ந்த குழுவின் அங்கத்தவரான செக் இப்ராஹிம் அலி என்பவர் வேறு இருவருடன் சேர்த்து காட்டுப் பகுதியொன்றில் சுட்டுக்கொல்லப்பட்டார்.

சோமாலியாவின் தலைநகர் மொகடீசுவில் இப்ராஹிம் ஒரு செல்வந்த வர்த்தகர் எனவும், சோமாலியாவின் தற்போதுள்ள தற்காலிக அரசாங்கத்தில் ஒரு அங்கத்தவர் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

சோமாலியாவில் 1991 ஆம் ஆண்டு ஜனாதிபதி மொஹமட் செட் பாறியின் ஆட்சி கலைக்கப்பட்டதன் பின் தற்காலிக அரசொன்று அப்துல் சுகீம் சலாட் கசனின் தலைமையில் அமைக்கப்பட்டிருந்தது.



இந்தியாவின் பஞ்சாப் மாநிலத்தில் முல்லான் என்ற பிரதேசத்தில் நடைபெற்ற முஸ்லிம்களின் மதவிழா ஒன்றில் கலந்துகொண்டுவிட்டு, ரயிலில் வீடு திரும்பும் மக்கள்.

# இத்தாலிய கடற்கரையில் மீட்கப்பட்ட 13 ஆபிரிக்க அகதிகளின் உடல்கள்

(றோம்)

இத்தாலியின் தென்பகுதியிலுள்ள லம்பெருசா கடற்கரைப் பிரதேசத்தில் 13 ஆபிரிக்க அகதிகளின் உடல்களை படகொன்றில் கண்டுபிடித்துள்ளதாக இத்தாலிய கடலோரக் காவல் கடமையில் ஈடுபட்டுள்ள அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதேவேளை - ஐந்து சட்டவிரோத குடியேற்றவாசிகள் மெடிரே ஒனியன் கடலில் தத்தளித்தபோது, கடலோரக்காவற் படையினரால் காப்பாற்றப்பட்டதாகவும், இவர்களில் ஒரு பெண் ஆபத்தான நிலையில் உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவர்கள் அனைவரும் சோமாலியா நாட்டைச் சேர்ந்தவர்கள் என அறியப்பட்டுள்ளது.

காப்பாற்றப்பட்ட அகதிகள் - இருபது நாட்களுக்கு முன்னர் லிபியாவிலிருந்து புறப்பட்டதாகவும், அவர்களது படகில் நூற்றுக்கு மேற்பட்டோர் பயணம் செய்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

குளிரும் பட்டினியுமே தம்முடன் பரயாணம் செய்த அனேகமானோரின் மரணத்திற்குக் காரணமாக அமைந்தது எனவும், இறந்தவர்களில் பலரின் உடல்களை தாம் கடலில் வீசியதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

# மாலைதீவு ஜனாதிபதியாக அப்துல் கயூம் ஆறாவது தடவையாகவும் தெரிவானார்!



(மாலி)

மாலைதீவில் நடத்தப்பட்ட மக்கள் கருத்துக் கணிப்பொன்றில் அந்த நாட்டு ஜனாபதி அப்துல் கயூம் ஆறாவது தடவையும் ஜனாதிபதியாக பெரும்பான்மை பலத்துடன் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

ஜனாதிபதி கயூம் 1978 ஆம் ஆண்டிலிருந்து மாலைதீவில் ஆட்சியிலிருந்து வருகின்றார்.

மாலைதீவின் தலைநகர் மாலியில் கடந்த செப்ரெம்பர் மாதம் 19 ஆம் திகதி சிறைச்சாலையில் ஏற்பட்ட கலவரங்களில் இரு சிறைக் கைதிகள் உயிரிழந்ததன் பின்னர் அங்கு கலவரங்கள் தொடர்ந்தது குறிப்பிடத்தக்கதாகும்.

இதனிடையே மாலைதீவு நாடாளுமன்றமும் ஜனாதிபதி கயூமை மீண்டும் ஏகமனதாகத் தேர்ந்தெடுத்திருந்தது.

இவர் நவம்பர் மாதம் 11 ஆம் திகதி மீண்டும் ஆட்சிப் பொறுப்பை ஏற்கவுள்ளார்.

ஆசியத் தலைவர்களிடையே நீண்டகாலம் ஆட்சி அதிகாரத்தில் இருப்பவர் என்ற பெருமையை கயூம பெற்றுள்ளார்.

# சதாம் ஆட்சிக் காலத்துப் படையினரை மீண்டும் சேவையில் ஈடுபடுத்தத் திட்டம்!

## ஈராக் ஆளுநர் சபை அமெரிக்காவிடம் கோரிக்கை

அமெரிக்கப்படையினரின் மீதான தாக்குதல்கள் ஈராக்கில் அதிகரித்து வரும் நிலையில், ஈராக்கை ஆட்சி செய்கின்ற ஆளுநர்சபை - சதாமின் ஆட்சிக்காலத்தில் கடமையாற்றிய ஈராக்கியப் படையினரையும், பொலிஸாரையும் சேவையில் மீண்டும் சேர்த்துக்கொள்ளுமாறு அமெரிக்காவைக் கேட்டுள்ளது.

சதாமின் ஆட்சிக் காலத்தில் கடமையில் இருந்த பொலிஸாரும், இராணுவத்தினரும் ஆரம்பத்தில், நன்கு திட்டமிடப்பட்ட முறையில் கடமையில் இருந்து விலக்கப்பட்டனர்.

இதன்காரணமாக தற்போது ஈராக்கின் பாதுகாப்புக் கடமையில் ஈடுபடுவதற்கு பாரிய ஆட்பற்றாக் குறை நிலவுகிறது.

இதனால் நாட்டில் குற்றவாளிகளும், அந்நிய நாட்டுத் தீய சக்திகளின் நடவடிக்கைகளும் அதிகரித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எனவே, சதாமின் ஆட்சிக்காலத்தில் கடமைபுரிந்த 300,000 பேரை படைகளில் இணைப்பதன் மூலம் நாட்டில் வன்முறைகளை குறைக்க முடியும் என்று கருதுவதாலேயே, ஈராக்கிய ஆளுநர் சபை - சதாமின் ஆட்சிக்காலத்துப் படையினரையும் சேர்த்துக்கொள்ளுமாறு அமெரிக்காவைக் கேட்டுள்ளது.

டிசம்பர் மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் ஈராக்கில் தேர்தலை நடத்துவதற்கான அரசியலமைப்பு உருவாக்கப்படவேண்டும் என ஐக்கிய நாடுகளின் பாதுகாப்புச் சபையில் நிறைவேற்றப்பட்ட பிரேரணையில் - வலியுறுத்தப்பட்டமை இங்கு குறிப்பிடத்தக்கது.

# சமையல்காரனுக்கு டயானா எழுதிய கடிதம் வெளியானது!



கார் விபத்தில் பலியான பிரிட்டிஷ் இளவரசி டயானா, 10 மாதங்களுக்கு முன்னர் தனது சமையல்காரருக்கு எழுதிய கடிதமொன்றில், தனது காரின் பிரேக்கில் கோளாறுகளை ஏற்படுத்தி தலைக் காயங்களால் மரணத்தை உண்டாக்க சிலர் முயலக்கூடுமெனத் தெரிவித்ததாக அண்மையில் டெய்லி மிரர் என்ற பத்திரிகைக்கு அவரின் சமையல்காரர் போல் புரெல் தெரிவித்திருந்தார்.

சம்பந்தப்பட்டவர் யார் என்பதை சட்டப்பிரச்சினைகள் காரணமாக அந்தப்பத்திரிகை தெரிவிக்க மறுத்துள்ளது.

1997 ஒக்ரோபர் மாதம் டயானாவும் அவரது காதலனான எகிப்தைச் சேர்ந்தவரான பயட்டும் பாரிஸில் சுரங்கப்பாதை ஒன்றினூடாக பயணம் செய்துகொண்டிருந்தவேளை விபத்தொன்றில் உயிரிழந்தனர்.

இளவரசர் சாள்ஸ் - தான் மீண்டும் ஒரு திருமணம் செய்வதற்காக இச்சதியில் ஈடுபட்டிருக்கலாம் என நம்பியதாகவும் அக்கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## உலக நோக்கு




தாய்லாந்துக்கு விஜயம் மேற்கொண்டிருக்கும் அமெரிக்க ஜனாதிபதி புஷ்ஷுக்கு எதிர்ப்புத் தெரிவித்து பாங்கொங்கில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தைப் படத்தில் காணலாம்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# ஜே.வி.பியின் இன்றைய வேலைநிறுத்தம் அரசியல் நோக்கங்களைக் கொண்டது!

## அமைச்சர் ராஜித சேனாரத்ன குற்றச்சாட்டு

பல தொழிற்சங்கங்கள் ஒன்றிணைந்து இன்று நடத்தவிருக்கும் வேலைநிறுத்தம் - குறுகிய அரசியல் நோக்கங்களைக் கொண்டது என்று, அமைச்சர் ராஜித சேனாரத்ன குற்றஞ்சாட்டியுள்ளார்.

அடுத்த வரவு செலவுத்திட்ட மூலம், சம்பள உயர்வு உட்பட பொருளாதார நிவாரணத்தை வழங்க உறுதிபூண்டிருக்கும் இந்தவேளையில், அரசாங்கத்தை சில ஊழியக் குழுக்கள் இக்கட்டான நிலைக்கு தள்ளுவதாக அவர் தெரிவித்தார்.

ஜப்பானிய நிதியுதவி கிடைக்கப் பெறுவதற்கு முன்னதாக, அரசாங்கம் பதவியிலிருந்து கவிழ்க்கப்பட வேண்டுமென்று, பொதுக் கூட்டணியை உருவாக்கும்போது, ஜனாதிபதியிடம் ஜே.வி.பியின் பிரசார செயலாளர் ஆலோசனை கூறியுள்ளதாக தெரியவந்துள்ளது.

பொதுக்கூட்டணியை அமைக்கும் ஆரம்ப முயற்சிகள் தோல்வியடைந்ததால், மக்களுக்கு ஜப்பானிய உதவியின் நன்மைகள் கிடைக்கும். இதனால் அரசாங்கத் திட்டங்களைச் சீர்குலைக்க ஜே.வி.பி முனைகிறது.

இந்த வேலைநிறுத்தத்தில் ஜே.வி.பி சார்பு தொழிற்சங்கங்களே அதிகளவில் பங்குபற்றுகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

## நாற்சந்தி

யாழ்.குடாவை நோக்கி இப்போது இந்திய சோதிடர்களின் 'படையெடுப்பு' அதிகரித்துவிட்டது.

பத்திரிகைகளைப் புரட்டினால் ஜோதிட திலகங்கள், ஜோதிட மேதைகள், அருள்வாக்கு கூறும் ஞானிகள், வாஸ்து சாஸ்திர நிபுணர்கள் எனப் பலரின் பெருமைகூறும் விளம்பரங்களை அதிகம் காணக்கூடியதாக இருக்கிறது.

இவர்களின் அருள்வாக்கினையும், ஆரூடங்களையும் கேட்கவும், ஆலோசனை பெறவும், எத்தனை பேர் போகிறார்கள் என்பது தெரியாது.

ஆனால், இவர்கள் தங்கியுள்ள தங்குமிடங்களின் வாடகைக்கும், ஏனைய செலவினங்களும் போக, மேலதிகமாக பெருமளவில் பணம் சம்பாதிப்பதாகவே தெரிகிறது.

மக்களின் பலவீனங்கள், துன்பதுயரங்கள், எதிர்காலம் குறித்த எதிர்பார்ப்புக்கள், ஆதங்கங்கள் என எல்லாமே ஜோதிடர்களின் பெட்டியை நிரப்ப உதவும்.

இந்த நம்பிக்கையே அவர்களைக் காலமறிந்து இங்குவர வைக்கிறது.

ஜோதிடம் உண்மையோ.... பொய்யோ அது வேறு விடயம்.

இது ஒரு கலை.... பணம் சம்பாதிக்கக்கூடிய தொழில் என்பது மட்டும் உண்மை....

'நாங்கள் கலை, கலாசாரம், மதம், பண்பாடு அனைத்தினாலும் அயலவர்களால் சுரண்டப்பட்டவர்களாகவே இருக்கிறோம். எங்களூர் சாத்திரிக்கு பத்து ரூபா கொடுக்கப் பஞ்சம் கொட்டுவோம், வெளியூர் என்றால் பத்தாயிரம் கொடுப்போம்.... இதுவும் எங்கட பலவீனம்தானே...' என்கிறார் கல்வியாளன்.

-தெருவாசி

## அவசரமாக இரத்தம் தேவை

யாழ்.போதனா வைத்திய சாலையின் இரத்த வங்கிக்கு அவரசமாக ஓ பொசிட்டிவ் ($O^+$) இரத்தம் தேவைப்படுகின்றது. இந்த வகை இரத்தம் உள்ளவர்கள் இரத்த தானம் செய்து உதவுமாறு யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் எஸ்.சதுர்முகம் கேட்டுள்ளார்.

## மிதிவெடி வெடித்து இளைஞன் காயம்

மிதிவெடியகற்றும் பணியில் ஈடுபட்டுக்கொண்டிருந்தவர் மிதிவெடி விபத்தில் படுகாயமடைந்தார். இச்சம்பவம் நேற்று கோப்பாய் நாவலர் வித்தியாசாலைக்கு அருகில் இடம்பெற்றது. இச்சம்பவத்தில் ஹலோ ட்ரஸ்ட் நிறுவனத்தில் பணியாற்றும் அன்ரனி விஜய் (வயது 26) என்பவரே படுகாயமடைந்தவராவார். கைகள் இரண்டிலும் காயங்களுக்குள்ளான இவர்,. யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

# கடற்படையினர் சுட்டதில் தமிழக மீனவர் காயம்!

## கண்டித்து இன்று இராமேஸ்வரத்தில் மறியல்

(சென்னை)

தலைமன்னார் - கச்சதீவுக் கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்த இந்திய மீனவர்கள் மீது, கடற்படையினர் தாக்குதலை மேற்கொண்டுள்ளனர்.

கடநத சனியன்று அதிகாலை 4 மணியளவில், மன்னார் கச்சதீவுக் கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து மீன்பிடித்துக் கொண்டிருந்த மீனவப் படகுகளை அவதானித்த இலங்கைக் கடற்படை யினர், அவர்கள் மீது தாக்குதலை மேற்கொண்டனர். இந்தத் தாக்குதலைத் தொடர்ந்து, மீனவர்கள் தப்பியோட முனைந்த போது, மீன்பிடி றோலர் ஒன்று [illegible]தடைந்தது.

அப்படகிலிருந்த இந்திய மீனவர்கள் தாக்குதலுக்கு உட்பட்டு காயமுற்றநிலையில் - இராமேஸ்வரம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து, இன்று இராமேஸ்வரத்தில் பேரணியொன்று நடைபெறவிருப்பதாக, அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

(201)

## புலிகளுக்கு அதிகாரங்களை...

தொடர்பாக பேச்சுக்கள் இடம்பெற்றதாகவும் தெரிவித்தார். இதன்பின், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க - துணைப் பிரதமர் எல்.கே.அத்வானியைச் சந்தித்து, சுமார் 45 நிமிடங்கள்வரை பேச்சுக்களை நடத்தினார். இந்தப் பேச்சுக்களின்பின் கருத்துத் தெரிவித்த அத்வானி - இந்தியாவுக்கும், இலங்கைக்கும் இடையிலான இருதரப்பு உறவுகள் தொடர்பாகவே பேசியதாகத் தெரிவித்தார்.

கடந்த மூன்று தசாப்தங்களாக 60 ஆயிரம் மக்களைப் பலிகொண்டு இலங்கையில் நடக்கும் இனப்போர் தொடர்பாகவும், தற்போதைய சமாதான முயற்சிகள் சந்தித்து நிற்கும் பிரச்சினைகள் தொடர்பாகவும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தன்னிடம் கூறியதாக அத்வானி தெரிவித்தார்.

அத்வானி மேலும் தெரிவிக்கையில், இந்தியா சமாதானத்துக்கு தனது பூரண ஆதரவை தெரிவிக்கும் அதேவேளை, சமாதான முயற்சி மேலும் முன்னேற்றமடைய வேண்டுமெனவும் விரும்புகின்றது.

அத்துடன், இந்தியா - விடுதலைப் புலிகளுக்கு அதிகாரப் பரவலைக் கொடுக்க ஆதரவளிக்கிறது. ஆனால் அது இலங்கையின் ஐக்கியம், இறைமை என்பன பாதிக்காத வகையில் இருக்கவேண்டும்.

பிரதமர் ரணில்விக்கிரமசிங்கவுடனான சந்திப்பில் விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனை நாட்டைவிட்டு வெளியேற்றுமாறு தான் கோரவில்லை எனவும், ஆனாலும் - இது ஒரு பெரிய விடயமெனவும் அத்வானி தெரிவித்தார்.

நேற்றையதினம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இந்திய வர்த்தகத் துறை அமைச்சர் அருண் ஜேட்லியையும் சந்தித்தார். இன்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க - இந்திய விமானப் போக்குவரத்து மற்றும் பெற்றோலியத்துறை அமைச்சரையும், எதிர்க் கட்சித் தலைவி சோனியா காந்தியையும் சந்தித்து பேச்சுக்களை நடத்தவுள்ளார் எனத் தெரியவருகிறது.

## கண்காணிப்பு...

ரெலவ்சனைக் கேட்டிருந்தார்கள்.

எந்தவொரு தகவலையும் புலிகளுக்கு வெளியிடவேண்டியநிலை தமக்கில்லை எனவும், கிழக்குக் கரைப்பக்கமாக அவர்களின் கப்பல் செல்கின்றதா எனத் தாம் புலிகளிடம் கேட்டதாகவும் கண்காணிப்புக்குழு தெரிவித்துள்ளது.

## ஆசிரியர்களின்...

நேற்றுமுன்தினம் தொலைபேசி அழைப்பின்மூலமே வேலைநிறுத்தத்தில் ஈடுபடுமாறு எமக்கு அழைப்பு விடுக்கப்பட்டது. இந்த தொலைபேசி அழைபபினை வைத்து, நாம் வேலைநிறுத்தத்தில் ஈடுபடுமாறு கிளைகளுக்கு அறிவிக்க முடியாது எனவும், இது தென்னிலங்கையில் திட்டமிட்ட முறையில் எதிர்க்கட்சிகளினால் மேற்கொள்ளப்படும் இவை போன்ற சம்பவங்களிற்கு, தமிழர் ஆசிரியர் சங்கம் துணைபோகமாட்டாது எனவும் அவர் தெரிவித்தார்.

## மன்னாரில்...

சாலையில் சேர்த்தார்.

இச்சம்பவம் தொடர்பாக மன்னார் பொலிஸ் நிலையத்தில் முறைபாடு செய்ததுடன், வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதனிடமும் முறையிடப்பட்டது.

இச்சம்பவத்தினை கண்டித்து பாதுகாப்பு அமைச்சருக்கும், பொலிஸ் தலைமையகத்துக்கும், நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதனால் அவசர கடிதமும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. (201)

# தென்னிலங்கை தொலைபேசிகளுக்கு சனிக்கிழமை முதல் குறியீடுகள் மாற்றம்

இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவின் 10 இலக்க மாற்றுத் திட்டத்தின் அடுத்த கட்ட மாற்றமான கொழும்பு (01), கண்டி (08), மற்றும் காலி (09) ஆகிய பிரதேசங்களுக்கான பிரதேசக் குறியீட்டு இலக்க மாற்றம் சனிக்கிழமை முதல் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளது.

இதன்படி - கொழும்பு, கண்டி, மற்றும் காலி ஆகிய பிரதேசங்களுக்கான பிரதேச குறியீடுகளின் பின்னால் '1' சேர்க்கப்படும். இதன் மூலம்- தற்போது இரண்டு இலக்கங்களைக் கொண்ட இப்பிரதேச குறியீடுகள், மூன்று இலக்கமாக மாற்றமடையும். இதன் பிரகாரம் இப்பிரதேசங்களின் குறியீடுகள், கொழும்பு - 011, கண்டி - 081 மற்றும் காலி - 091 என மாற்றமடைந்துள்ளது.

## தனித்தரப்பாக பங்கேற்கும்...

நேற்றிரவு நமது ஈழநாட்டிற்குத் தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பில் முஸ்லிம்களின் கோரிக்கை குறித்துக் கருத்துத் தெரிவித்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பிரமுகர்கள் -

முஸ்லிம்கள் புலிகளுடன் பேசியே முதலில் பிரச்சினைக்குத் தீர்வுகாணவேண்டும். மூன்றாம் தரப்பாகப் பேச்சுக்களில் பங்குபற்றும் தீர்மானத்தை விட்டு, முதலில் புலிகளுடன் பேசி இணக்கத்தினை ஏற்படுத்தி பின்னர், இருதரப்பும் இணைந்து அரசுடன் பேச்சு நடத்துவதன் மூலம் உரிமைகளைப் பெறலாம் எனத் தெரிவித்தனர்.

இந்தச் சந்திப்பில் கூட்டமைப்பு சார்பில் நாடாளுமன்ற உறுப்பினர்களான இரா.சம்பந்தன், ரவிராஜ், கஜேந்திரகுமார், துரைரட்ணசிங்கம் மற்றும் சுரேஷ் பிறேமச்சந்திரன், குமரகுருபரன் ஆகியோரும்,

முஸ்லிம்கள் தரப்பில் அமைச்சர் ரவூப் ஹக்கீம், பிரதி அமைச்சர் நூர்தீன் மசூர், பஷீர் சேகுதாவூத், ஹிஸ்புல்லா, தௌபீக் உள்ளிட்ட குழுவினரும் பங்கேற்றனர்.

இந்தச் சந்திப்பின் முடிவில் நாடாளுமன்ற விவாதத்தில் கூட்டமைப்பு நடுநிலைமை வகிப்பதென தீர்மானிக்கப்பட்டதாகவும் தெரியவருகிறது.




## மரண அறிவித்தல்

### பரராசசேகரம் பார்த்தீபன்

நல்லூர், கடுக்காயடி ஒழுங்கையைப் பிறப்பிடமாகக்கொண்ட பரராசசேகரம் பார்த்தீபன் (சேகர் சவுண்ஸ் அன்ட் மியூசிக் உரிமையாளர்) 17.10.2003 வெள்ளிக்கிழமை அகாலமரணமடைந்துவிட்டார்.

அன்னார், சேகர் சவுண்ஸ் சேவிஸ் உரிமையாளர், காலஞ்சென்ற பரராசசேகரம், திருமதி.பவளரதம் பரராசசேகரம் ஆகியோரின் பாசமிகு மகனும், பொப்சி டுளாணியின் பாசமிகு கணவரும், றோமியா, தார்மிகன், பரணிதா ஆகியோரின் பாசமிகு தந்தையும், குமணதீபன், அபிராமி ஆகியோரின் பாசமிகு சகோதரனும், காலஞ்சென்ற அப்புத்துரை அரசமணி மற்றும் யோகநாதன், நாகேஸ்வரி, அல்பிறெட், ஜெயநதி ஆகியோரின் மருமகனும், காலஞ்சென்ற மகேந்திரராசா (லண்டன்) மற்றும் நேமிநாதன் (லண்டன்), ஜெயபாபு (லண்டன்), சுகுணதாசன் (லண்டன்), சுகிர்ததாசன் (சுகந்தன் - லண்டன்), திருமகள் ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் தகனக்கிரியை 21.10.2003 இன்று செய்வாய்க்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு செம்மணி இந்து மயானத்தில் இடம்பெறும். இவ்வறித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்:**

**குமணன் (சகோதரன்),**
**சேகர் சவுண்ட் அன்ட் மியூசிக்,**
**நல்லூர்.**

(511)

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 21.10.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.